# அத்தியாயம் 4


## விலைகள், கூலிகள், தொழில்நிலை மற்றும் உற்பத்தித்திறன்

### 4.1 பொதுநோக்கு

**பணவீக்கத்தில், 2008 இன் இறுதிப்பகுதியில் அவதானிக்கப்பட்ட மெதுவடைவானது கேள்விப்பக்க மற்றும் வழங்கல்பக்கக் காரணிகள் இரண்டிலுமான சாதகமான அபிவிருத்திகள் காரணமாக 2009 இல் மேலும் தொடர்ந்து காணப்பட்டது.** கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணால் (கொநுவிசு) (2002 = 100) அளவிடப்படும் பணவீக்க வீதம் 2008 யூனில் பதிவு செய்யப்பட்ட 28.2 சதவீதம் கொண்ட அதன் உச்ச மட்டத்திலிருந்து ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 2009 திசெம்பரில் 4.8 சதவீதத்திற்கு மெதுவடைந்தது. முன்னைய இரண்டு ஆண்டுகளில் மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட கடுமையான நாணயக் கொள்கைகளின் விளைவு மற்றும் முன்னேற்றமடைந்த உள்நாட்டு வழங்கல் நிலைமைகள் மற்றும் நிருவகிக்கப்பட்ட விலைகளின் கீழ் நோக்கிய திருத்தங்களுடன் இணைந்து பன்னாட்டுச் சந்தையில் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி பணவீக்கத்தில் விரைந்த மெதுவடைவை ஏற்படுத்த உதவின. அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களின் கூலிகளினூடாக ஏற்படுத்தப்பட்ட பணவீக்க அழுத்தம் வழங்கல் பக்கத்து காரணிகளில் ஏற்பட்ட சாதகமான அபிவிருத்திகள், அதிகரித்த தொழிலாளர் உற்பத்தித்திறன் அதுபோல் மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட முன்மதியுடைய நாணயக் கொள்கைகள் ஊடாக கட்டுப்படுத்தப்பட்டது. 2009இன் இறுதிக் காலாண்டை நோக்கிய புள்ளிக்குப் புள்ளி பணவீக்கத்திலான படிப்படியான அதிகரிப்பு 2009 செத்தெம்பரிலான 0.7 சதவீதத்திலிருந்து 2009 திசெம்பரில் 4.8 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு 2008இன் உயர் தளத்தின் தாக்கத்தின் சிதறல் காரணமாக இருந்தது. இதேவேளை, 2008 ஒத்தோபரில் 23.4 சதவீதம் கொண்ட உச்ச மட்டத்திலிருந்து தொடர்ந்து மெதுவடைந்து 2009 ஒகத்தில் 8.5 சதவீதம் கொண்ட ஒற்றை இலக்கமட்டத்தை அடைந்த ஆண்டுச் சராசரிப் பணவீக்க வீதம் 2009 திசெம்பரில் 3.4 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் மேலும் வீழ்ச்சியடைந்தது. இதுவே, 1985 இற்குப் பின்பு பதிவு செய்யப்பட்ட ஆகக் குறைந்த ஆண்டுச் சராசரி (ஆண்டிறுதி) பணவீக்க வீதமாகும். அதேவேளை, உணவும் வலுவும் தவிர்ந்தவற்றின் விலை மாற்றங்களின் மூலம் அளவிடப்படும் கொ.நு.வி.சு. கூடைப்பொருட்களின் மையப் பணவீக்கமும் குறைந்து செல்லும் போக்கைக்காட்டி 2008 திசம்பரில் காணப்பட்ட 15.7 சதவீதத்திலிருந்து 2009 திசம்பரில் 5.9 சதவீதமாக ஆண்டுக்காண்டு அடிப்படையில் குறைவடைந்தது. 2008 திசம்பரில் காணப்பட்ட 13.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2009 திசம்பரில் 9.2 சதவீதத்திற்கு ஆண்டுச் சராசரி மையப்பணவீக்கம் குறைவடைந்தது.

**முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2009இல் அரச துறை, முறைசார் தனியார் துறை மற்றும் முறைசாராத் தனியார்துறை ஆகிய அனைத்து மூன்று துறைகளினதும் பெயரளவு மற்றும் உண்மைக் கூலிகள் இரண்டும் அதிகரித்தன.** 2009 சனவரியிலும், நவெம்பரிலும் வாழ்க்கைச் செலவுப்படி முறையே ரூ.1,000 ஆலும் ரூ.750 ஆலும் மேல் நோக்கி சீராக்கப்பட்டதன் மூலம் அரச துறை ஊழியர்களின் அனைத்து வகைகளினதும் பெயரளவு கூலி வீதச் சுட்டெண்கள் 2009இல் கிட்டத்தட்ட 9.4 சதவீதத்தால் அதிகரித்தன. அரசதுறை ஊழியர்கள் இவ்வாண்டு முழுவதும் நிலவிய மெதுவடைந்து செல்லும் பணவீக்கத்தால் மேலும் நன்மையடைந்து 2008இன் உண்மைக் கூலி வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2009இல் கிட்டத்தட்ட 5.7 சதவீதம் கொண்ட உண்மைக் கூலி அதிகரிப்புக்கு வழி வகுத்தது. இது போலவே, கூலி நிர்ணயச் சபைகளின் ஆதிக்கத்திற்குட்பட்ட முறைசார் தனியார்துறையின் மூன்று முக்கிய வகைகளுக்கான ஆகக் குறைந்த கூலிகள் அதிகரித்ததுடன் முழுத் துறைக்கான

வரைபடம் 4.1 கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (2002=100)




ஒட்டுமொத்த பெயரளவு கூலி வீதச் சுட்டெண்ணை 4.9 சதவீதத்தால் உயர்த்தியது. பணவீக்கத்திலான படிப்படியான மெதுவடைவு காரணமாக அவையும் இவ்வாண்டில் சராசரியாக 1.6 சதவீதம் கொண்ட உண்மைக் கூலி அதிகரிப்பை அனுபவித்தன. இதே மாதிரியான போக்கைப் பின்பற்றி முறைசாராத் துறை தொழிலாளர்களின் பெயரளவு மற்றும் உண்மைக் கூலிகள் இரண்டும் 2009இல் அதிகரித்தன.

**கடந்த சில ஆண்டுகளாக அதன் வீழ்ச்சியடைந்து வரும் தொழில்வாய்ப்பின்மை வீதம் முக்கியமாக பொருளாதாரத்தின் மீது உலகளாவிய மந்தநிலையின் மோசமான தாக்கங்கள் காரணமாக 2008இல் தாழ்ந்த மட்டத்தை பதிவு செய்தது.** எனினும், 2009இன் மூன்றாம் காலாண்டிலிருந்து தொழில்வாய்ப்பின்மை வீதம் வீழ்ச்சியடையத் தொடங்கி நடைபெற்று வரும் பொருளாதாரச் செயற்பாடுகள் மற்றும் உலகப் பொருளாதாரத்திலான படிப்படியான மீட்சியுடன் பொருளாதாரத்தின் மீளெழுச்சியை எடுத்துக்காட்டுகிறது. இதேவேளை, மொத்த தொழில்நிலையில் பணிகள் துறையின் ஆதிக்கம் அதிகரித்துச் செல்லல் கைத்தொழில் துறையின் பங்கு குறைவடைந்து செல்லல் என்பன மூலம் பாரிய கைத்தொழில் குழுமங்களிடையே தொழில்நிலையின் கூட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அரசதுறைத் தொழில்நிலை, தனியார்துறைத் தொழில்நிலை மற்றும் செலுத்தப்படாத குடும்பத் தொழிலாளர்கள் இவ்வாண்டில் வளர்ச்சியடைந்தன. எனினும், சுயதொழிலில் ஈடுபடுவோர் மற்றும் தொழில்தருநர் வகைகளில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. தற்போது நடைபெற்று வருவதும் திட்டமிடப்பட்டதுமான உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் கூடிய தொழில் வாய்ப்பை உருவாக்கும். குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் வேளாண்மைத் துறையிலான அதிகரித்த செயற்பாடுகள் தொழில்நிலை வாய்ப்புக்களையும் உருவாக்கும். இதேவேளை, கடந்த ஆண்டுகளில் காணப்பட்ட தொழிலாளர் உற்பத்தித்திறனிலான மேம்பாடு இடம்பெற்றது. அதேவேளை, உள்நாட்டில் தொழில்புரியும் குடித்தொகையில் நான்கிலொரு பங்காக விளங்கும் வெளிநாட்டுத் தொழில்நிலை வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் நியதிகளில் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்களவில் தொடர்ந்து பங்களிப்புச் செய்தது.

## 4.2. விலைகள்

### விலை அசைவுகளும் பங்களிப்புக் காரணிகளும்

### கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொநுவிசு)

**நாட்டின் அலுவல்சார் நுகர்வுச் சுட்டெண்ணான கொநுவி சுட்டெண் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 4.8 சதவீத அதிகரிப்பையும் ஆண்டுச் சராசரி அடிப்படையில் இரண்டு தசாப்தத்திற்கும் கூடுதலான காலப்பகுதிக்கு பதிவு செய்யப்பட்ட ஆகக் குறைந்த ஆண்டிறுதியிலான ஆண்டுச் சராசரி வீதமான 3.4 சதவீத அதிகரிப்பையும் பதிவு செய்தது.** சுட்டெண் 2008 திசெம்பரின் 203.7 இலிருந்து 2009 திசெம்பரில் 213.5 இற்கு 9.8 சுட்டெண் புள்ளிகளால் அதிகரித்தது. சுட்டெண்ணிலான புள்ளிக்குப் புள்ளி மாற்றம் சனவரியின் 10.7 சதவீதத்திலிருந்து 2009 செத்தெம்பரில் 0.7 சதவீதத்திற்கு உறுதியாக வீழ்ச்சியடைந்து ஐந்து வருடங்களுக்கும் கூடுதலான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ஆகக் குறைந்த மட்டத்தை அடைந்தது. இது பின்பு 2009 திசெம்பரில் 4.8 சதவீதத்தை அடைவதற்கு படிப்படியாக அதிகரித்தது. ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் 2008 ஒத்தோபரில் பதிவு செய்யப்பட்ட 23.4 சதவீதம் கொண்ட உச்ச மட்டத்திலிருந்து ஆண்டு முழுவதும் அதன் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கைத் தொடர்ந்தது.

**2009இல் பணவீக்கத்திலான வீழ்ச்சி, கேள்வி மற்றும் வழங்கல் பக்க காரணிகள் இரண்டினதும் விளைவால் ஏற்பட்டதாகும்.** கேள்விப் பக்கத்தில், கடந்த இரு ஆண்டுகளில் மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகள் பொருளாதாரம் மீதான கேள்வி அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கு உதவியது. வழங்கல் பக்கத்திலான சாதகமான அபிவிருத்திகள் உற்பத்தித்திறனை அதிகரித்தது போல் முன்முதியுடைய நாணயக் கொள்கை வழிமுறைகள் அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களின் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பால் ஏற்பட்டிருக்கக்கூடிய எந்தவொரு கேள்வி அழுத்தத்தையும் கட்டுப்படுத்த உதவியது. பெரும்பாலும் வடக்கு மற்றும் கிழக்கிலிருந்தான மேம்பாடடைந்த உள்நாட்டு வழங்கல் நிலைமைகள் அது போல் உறுதியான செலாவணி வீதம் இவ்வாண்டில் கொநுவிசுட்டெண் மீதான விலை அழுத்தத்தைக் குறைத்தது.

**2009இன் மொத்த மாதாந்த நுகர்வுச் செலவினத்தின் 72.6 சதவீதமளவிற்கு சராசரியாக வகை கூறிய உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களிலான விலை அதிகரிப்புக்கள் இவ்வாண்டில் பணவீக்கம் மீது கூடிய தாக்கத்தைக் கொண்டிருந்தது.** இவ்வாண்டில் ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கத்திற்கு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களிலிருந்தான பங்களிப்பு 2009 சனவரியின் 75.4 சதவீதத்திலிருந்து 2009 திசெம்பரில் 100.6 சதவீதத்திற்கு அதிகரித்திருக்கையில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களிலிருந்தான பங்களிப்பு பன்னாட்டுச் சந்தையில் பொருட்களின் விலைகள் விரைவாகக் குறைவடைந்து செல்வதுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் சனவரியின் 24.6 சதவீதத்திலிருந்து 2009 திசெம்பரில் -0.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**பணவீக்கத்துக்கான பெரும் பங்களிப்பு கொநுவி சுட்டெண்ணில் 46.7 சதவீதம் கொண்ட ஆகக் கூடிய நிறையைக் கொண்டுள்ள உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகைகள் துணைச் சுட்டெண்ணிலிருந்து பெறப்பட்டது.** உணவு துணைச் சுட்டெண்ணில் புள்ளிக்குப் புள்ளி மாற்றம் இவ்வாண்டில் ஆரம்பத்திலான 10.2 சதவீதத்திலிருந்து 2009 ஏப்பிறலில் -1.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த போதிலும் பின்பு 2009 திசெம்பரில் 6.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொத்தச் சுட்டெண்ணில் உணவுத் துணைச் சுட்டெண்ணின் ஆதிக்கம் காரணமாக பொதுவான பணவீக்கம் அநேகமாக இச் சுட்டெண்ணுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் நகர்ந்தது.

**அட்டவணை 4.1 விலைச் சுட்டெண்களில் ஏற்பட்ட மாற்றங்கள்**

| சுட்டெண் | சாராசரிச் சுட்டெண் | | | புள்ளிக்குப்புள்ளி சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2007 | 2008 | 2009 (அ) | திசெ. 2008/ திசெ. 2007 | திசெ. 2009/ திசெ. 2008(அ) | 2008/2007 | 2009/2008 (அ) |
| கொநுவிசு (2002=100) | 163.1 | 199.9 | 206.8 | 14.4 | 4.8 | 22.6 | 3.4 |
| மொ.வி.சு | 2,924.4 | 3,653.6 | 3500.9 | 0.7 | 13.3 | 24.9 | -4.2 |
| மொ.உ.உ.சுருக்கி | 256.4 (ஆ) | 298.3 | 315.1 | - | - | 16.3 | 5.7 |

(அ) தற்காலிகமானவை
(ஆ) திருத்தியமைக்கப்பட்டவை

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

உணவுத் துணைச் சுட்டெண் இவ்வாண்டில் ஒட்டு மொத்த கொநுவி சுட்டெண்ணிலான ஆண்டுச் சராசரி மாற்றத்திற்கு 40.1 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்தது. உணவுத் துணைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி அதிகரிப்பு 2009 இறுதியில் 2.8 சதவீதமாக விளங்கியது. மீன், தேசிக்காய், உள்ளி, பம்பாய் மற்றும் சின்ன வெங்காயம், சீனி, பருப்பு, உருளைக் கிழங்கு மற்றும் முட்டைகள் என்பவற்றிலான விலை அதிகரிப்புகள் உணவுத் துணைச் சுட்டெண்ணில் அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்த முக்கிய பொருட்களாகும்.

**அதிகரித்த உள்ளூர் வழங்கல் நிலைமைகள் காரணமாக குறிப்பாக அரிசி, தானியம், மரக்கறிகள் மற்றும் தேங்காய் போன்ற உள்ளூர் வேளாண்மைப் பொருட்களின் சராசரி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி விலை அழுத்தத்தைக் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்தது.** சிறுபோக பயிர்ச்செய்கையைப் பாதித்த மோசமான வானிலை நிலைமைகளால் ஏற்பட்ட வழங்கல் பற்றாக்குறை காரணமாக ஆண்டின் நடுப்பகுதியிலும் இறுதியிலும் நெல் விலைகள் அதிகரிப்புகளைப் பதிவு செய்த போதிலும், 2009இல் அரிசியின் சராசரி விலை 2008 உடன் ஒப்பிடுகையில் 2.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. திருப்திகரமான 2008/2009 பெரும்போக அறுவடை, அரிசி மீது அரசால் விதிக்கப்பட்ட விலை உச்ச வரம்பு மற்றும் இவ்வாண்டின் இறுதியில் அரிசி இறக்குமதிகள் மீதான தீர்வை விலக்களிப்பு அரிசி விலைகள் வீழ்ச்சியடைவதற்கு உதவின. இவ்வாண்டின் குறிப்பிட்ட மாதங்களில் அதிகரிப்புகள் பதிவு செய்யப்பட்ட போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மரக்கறிகளின் விலைகளும் சார்பு ரீதியில் குறைவாகக் காணப்பட்டன. உருளைக்கிழங்கு பயிரிடப்படும் பிரதேசங்களில் நிலவிய சாதகமற்ற காலநிலைமைகள் காரணமாக ஏற்பட்ட குறைந்த வழங்கலின் முக்கிய காரணத்தால் உருளைக்கிழங்கின் உள்ளூர் சராசரி விலை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2009இல் 19.5 சதவீதத்தால் அதிகரித்தது. தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெயின் விலை 2008 உடன் ஒப்பிடுகையில் 2009இல் முறையே 22.2 சதவீதத்தாலும் 24.0 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது.

**பெரும்பாலும் அதிகரித்த கேள்வி மற்றும் வழங்கலிலான தளம்பல் காரணமாக மீன் மற்றும் கடல் உணவின் சராசரி விலைகள் 2009இல் கிட்டத்தட்ட 4.4 சதவீதத்தால் அதிகரித்தன.** இருப்பினும், யூலையின் மீன்பிடி பருவகாலம் ஆரம்பமானமை மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு கரையோரப் பிரதேசங்களில் மீன்பிடிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் மீன் வழங்கல் 2009 யூலையிலிருந்து அதிகரித்ததுடன் மீனின் விலைகள் மிதமடையத் தொடங்கின.

**அட்டவணை 4.2 இறக்குமதிகள் செய்யப்பட்ட மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட முக்கிய பொருட்களின் சில்லறை விலைகள்**

| விடயம் | | அலகு | கொ.நு.வி.சு (2002=100) நிறை % | விலை - ருபா | | | | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆண்டுச் சராசரி | | | திசெ- 2007 | திசெ- 2008 | திசெ. 2009(அ) | ஆண்டுச்சராசரி | | புள்ளிக்குப் புள்ளி | |
| | | | | 2007 | 2008 | 2009(அ) | | | | 2008/ 2007 | 2009/ 2008 (அ) | திசெ. 2008/ திசெ. 2007 | திசெ.2009/ திசெ2008.(அ) |
| உள்நாட்டு | அரிசி-சம்பா | கி.கி | 2.8 | 50.98 | 76.53 | 76.57 | 63.71 | 78.64 | 82.41 | 50.1 | 0.1 | 23.4 | 4.8 |
| | அரிசி-பச்சை(சிவப்பு) | கி.கி | 0.9 | 44.56 | 64.65 | 63.64 | 55.32 | 66.38 | 66.78 | 45.1 | -1.6 | 20.0 | 0.6 |
| | அரிசி-பச்சை (வெள்ளை) | கி.கி | 0.6 | 38.78 | 60.66 | 59.85 | 51.68 | 62.63 | 63.22 | 56.4 | -1.3 | 21.2 | 0.9 |
| | அரிசி - நாடு | கி.கி | 0.5 | 44.45 | 65.29 | 65.44 | 56.99 | 68.43 | 69.45 | 46.9 | 0.2 | 20.1 | 1.5 |
| | தேங்காய் (நடுத்தரம்) | காய் | 5.4 | 21.83 | 28.88 | 23.02 | 27.83 | 24.87 | 27.53 | 32.3 | -20.3 | -10.6 | 10.7 |
| | மீன்-கெலவல்ல | கி.கி | 1.1 | 407.10 | 471.50 | 510.18 | 414.72 | 490.07 | 502.60 | 15.8 | 8.2 | 18.2 | 2.6 |
| | அவரை | கி.கி | 0.5 | 83.51 | 102.60 | 95.41 | 82.93 | 110.27 | 116.04 | 22.9 | -7.0 | 33.0 | 5.2 |
| | கத்தரி | கி.கி | 0.2 | 52.12 | 64.57 | 60.03 | 55.99 | 81.49 | 82.53 | 23.9 | -7.0 | 45.5 | 1.3 |
| | முட்டை | ஒன்று | 0.4 | 9.31 | 10.16 | 11.44 | 11.64 | 11.55 | 14.53 | 9.1 | 12.6 | -0.8 | 25.8 |
| இறக்குமதிகள் | சீனி | கி.கி | 1.1 | 54.30 | 63.58 | 82.09 | 53.21 | 66.12 | 88.12 | 17.1 | 29.1 | 24.3 | 33.3 |
| | பால்மா-அங்கர் | 400கி | 3.8 | 189.32 | 274.63 | 254.30 | 268.82 | 267.32 | 232.77 | 45.1 | -7.4 | -0.6 | -12.9 |
| | சிவப்புப்பருப்பு | கி.கி | 0.8 | 103.80 | 189.11 | 199.37 | 117.64 | 205.31 | 177.66 | 82.2 | 5.4 | 74.5 | -13.5 |
| | கோதுமை மா | கி.கி | 0.2 | 55.36 | 73.86 | 71.75 | 66.12 | 71.81 | 70.62 | 33.4 | -2.9 | 8.6 | -1.7 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட நிருவாக விலை மீளாய்வுகள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் இரண்டினதும் விலைகளில் தாக்கத்தைக் கொண்டிருந்தன.** 2008 திசெம்பரிலிருந்து நடைமுறைக்கு வந்த எரிபொருள் விலைக் குறைப்புகள் (பெற்றோல் ரூ.10, டீசல் ரூ.10 மற்றும் மண்ணெண்ணெய் ரூ.2, லீற்றர் ஒன்றுக்கு) விலைகள் மீது நேரடியானதும் மறைமுகமானதுமான தாக்கத்தைக் கொண்டிருந்தன. மசகெண்ணெயின் இறக்குமதி விலை சனவரியின் பீப்பா ஒன்றுக்கான ஐ.அ.டொலர் 41.71 இலிருந்து 2009 யூனில் பீப்பா ஒன்றுக்கான ஐ.அ.டொலர் 72.8 இற்கு அதிகரித்தமையுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் யூலை 02 அன்று நடைமுறைக்கு வந்த பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலைகள் லீற்றர் ஒன்றுக்கு முறையே ரூ.10/-, ரூ.3/-, ரூ.1/- இற்கு மேல் நோக்கித் திருத்தப்பட்டமை இவ்வாண்டின் எஞ்சிய பகுதியில் விலைகள் மீது ஓரளவு மேல் நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தியது. 2009 திசெம்பர் 30 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பெற்றோலின் விலை லீற்றர் ஒன்றுக்கு ரூ.15/- ஆல் குறைக்கப்பட்டதன் தாக்கம் 2010இல் உணரப்படும். இதேவேளை, திரவப் பெற்றோலிய வாயுவின் விலைகள் 2009இல் 6 தடவைகள் திருத்தியமைக்கப்பட்டன. 2008இலிருந்து வந்த இவ் விலை மீளாய்வுகள் சுட்டெண் மீது சாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தது. 2008 திசெம்பர் 31 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 12.5 கிலோக்கிறாம் சிலிண்டர் செல் மற்றும் லாவ் திரவப் பெற்றோலிய வாயுவின் விலைகள் முறையே ரூ.166/- ஆலும் (9.3 சதவீதம்), ரூ.276/- ஆலும் (16.4 சதவீதம்), ரூ.1,619/- இற்கும் ரூ.1,403/- இற்கும் குறைக்கப்பட்டன. 2009இல் மேற்கொள்ளப்பட்ட (இரு பகிர்ந்தளிப்பாளர்களாலும்) ஆறு விலை மீளாய்வுகளின் தேறிய விளைவாக செல் திரவப் பெற்றோலிய வாயுவின் உள்நாட்டு விலை 4.3 சதவீதத்தால் ரூ.1,550 இற்கு வீழ்ச்சியடைந்த போதிலும் லாவ் திரவப் பெற்றோலிய வாயுவின் விலை 1.3 சதவீதத்தால் ரூ.1,421 இற்கு அதிகரித்தது.

**பன்னாட்டுப் பொருட்களின் விலைகளிலான வீழ்ச்சியுடன் இணைந்து செல்லும் விதத்தில் முக்கிய நுகர்வுப் பொருட்களின் உள்நாட்டு விலைகளும் வீழ்ச்சியடைந்தன.** இவ்வாண்டின் ஆரம்பத்தில் சரக்குக் கட்டணங்களிலான வீழ்ச்சியும் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. இதன்படி, கோதுமை மா, பால் மா, தாவர எண்ணெய் மற்றும் சமையல் எண்ணெயின் சராசரி இறக்குமதி விலைகள் வீழ்ச்சியடைந்தன. எனினும், பருப்பு மற்றும் சீனியின் வழங்கல் பற்றாக்குறையுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் பன்னாட்டில் இவற்றின் விலைகள் அதிகரித்ததுடன் இவற்றின் உள்நாட்டு விலைகளை உறுதிப்படுத்துவதற்கு அரசு 2009 ஏப்பிறல் ஆரம்பத்தில் அப் பொருட்கள் மீது விலை உச்சவரம்பை விதித்தது. 2009 மே 01 இலிருந்து விலை உச்ச வரம்பு நீக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கக் கடைகளுடாக குறைந்த விலைகளில் பல உணவுப் பொருட்களை விற்பதற்கான ஒழுங்குமுறைகளையும் அரசு மேற்கொண்டது. இதன்படி, சீனி, பருப்பு மற்றும் தகரத்திலடைத்த மீனின் விலைகள் 2009 நவெம்பர் 07இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டன. மேலும், பால் மா மற்றும் கோதுமை மா மீதான இறக்குமதி வரி முறையே கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.15 ஆலும் ரூ.10 ஆலும் 2009 யூலை 20 இலிருந்தும், 2009 திசெம்பர் 18 இலிருந்தும் நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டன.

**அட்டவணை 4.3** **2008 மற்றும் 2009 இன் நிருவகிக்கப்பட்ட விலைத் திருத்தங்கள்**

| விடயம் | அலகு | விலை (திசெ.) - ரூ. | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | | 2007 | 2008 | 2009 | 2008/2007 | 2009/2008 |
| சிகரட்டுகள் (கோல்ட்லீவ்) | ஒன்று | 14.00 | 16.00 | 18.00 | 14.3 | 12.5 |
| சிகரட்டுகள் (பிறஸ்டல்-விக்ரோய்) | ஒன்று | 12.00 | 13.00 | 14.00 | 8.3 | 7.7 |
| தென்னஞ் சாராயம் | 750 மில்லி.லீற் | 525.00 | 550.00 | 610.00 | 4.8 | 10.9 |
| அதிவிசேட சாராயம் | 750 மில்லி.லீற் | 450.00 | 500.00 | 565.00 | 11.1 | 13.0 |
| டீசல் | 1 லீற்றர் | 75.00 | 70.00 | 73.00 | -6.7 | 4.3 |
| மண்ணெண்ணெய் | 1 லீற்றர் | 68.00 | 50.00 | 51.00 | -26.5 | 2.0 |
| பெற்றோல் | 1 லீற்றர் | 117.00 | 120.00 | 115.00 | 2.6 | -4.2 |
| எரிவாயு - ஷெல் | 12.5 கி.கி | 1,313.00 | 1,619.00 | 1,550.00 | 23.3 | -4.3 |
| எரிவாயு - லாப் | 12.5 கிகி | 1,248.00 | 1,403.00 | 1,421.00 | 12.4 | 1.3 |
| உலை எண்ணெய் (1000) | 1 லீற்றர் | 52.70 | 32.70 | 42.70 | -38.0 | 30.6 |
| உலை எண்ணெய்(1500) | 1 லீற்றர் | 51.70 | 31.70 | 41.70 | -38.7 | 31.5 |
| உலை எண்ணெய்(3500) | 1 லீற்றர் | 46.65 | 25.00 | 36.65 | -46.4 | 46.6 |
| மின்சாரம் - நிலையான கட்டணங்கள் | தீர்வைத்தொகுதி | | | | | |
| | முதல் 30 அலகுகள் | 60.00 | 60.00 | 60.00 | 0.0 | 0.0 |
| | 31 - 60 அலகுகள் | 90.00 | 90.00 | 90.00 | 0.0 | 0.0 |
| | 61 - 90 அலகுகள் | 120.00 | 120.00 | 120.00 | 0.0 | 0.0 |
| | 91 - 180 அலகுகள் | 180.00 | 180.00 | 180.00 | 0.0 | 0.0 |
| | 180 இற்கு மேற்பட்ட அலகுகள் | 240.00 | 240.00 | 240.00 | 0.0 | 0.0 |
| மின்சாரம் - அலகுக்கான கட்டணங்கள் | தீர்வைத்தொகுதி | | | | | |
| | முதல் 30 அலகுகள் | 3.00 | 3.00 | 3.00 | 3.00 | 0.0 |
| | 31 - 60 அலகுகள் | 4.70 | 4.70 | 4.70 | 0.0 | 0.0 |
| | 61 - 90 அலகுகள் | 7.50 | 7.50 | 7.50 | 0.0 | 0.0 |
| | 91 - 180 அலகுகள் | 14.00 | 16.00 | 16.00 | 14.3 | 0.0 |
| | 180 இற்கு மேற்பட்ட அலகுகள் | 19.80 | 25.00 | 25.00 | 26.3 | 0.0 |
| பேருந்து கட்டணம் | - | - | - | | 17.6 | 5.3 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

## சிறப்புக்குறிப்பு 6

## இலங்கைக்கான புதிய மையப் பணவீக்க அளவீட்டினை அறிமுகப்படுத்தல்

### கோட்பாடு, அளவீடுகள் மற்றும் பன்னாட்டு நடைமுறைகள்

தாழ்ந்த மற்றும் உறுதியான மட்டத்தில் பணவீக்கத்தை அடைவதையும் பேணுவதையும் குறிக்கின்ற விலை உறுதிப்பாடு அநேகமான மத்திய வங்கிகளின் பிரதான குறிக்கோளாக விளங்குகிறது. நாணயக் கொள்கை நடவடிக்கைகள் கால தாமதத்துடன் பணவீக்கத்தைப் பாதிப்பதால் மத்திய வங்கிகள் விலை உறுதிப்பாட்டை அடையும் பொருட்டு, முன்னோக்கிய பார்வையைக் கவனத்திற் கொண்டு நாணயக் கொள்கையை நடத்துகின்றன. ‘முதன்மைப் பணவீக்கம்’ எளிமையானதும் இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடிய அளவீடாகவும் இருப்பதால் இது நாணயக் கொள்கையை நடத்துவதற்காக பரந்தளவில் பயன்படுத்தப்படும் அளவீடாகும்[1]. முதன்மைப் பணவீக்கம் பருவகாலம், அரச வரிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் பன்னாட்டு பொருட்கள் விலைகள் உள்ளிட்ட அனைத்து விலை அசைவுகளையம் உள்ளடக்குகிறது. குறிப்பாக உயர் விலைத் தளம்பலைக் கொண்ட பொருட்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் உள்ளடக்குவதன் மூலம் ஆரவாரமானதாக இருக்குமேயன்றி முதன்மைப் பணவீக்கம் பணவீக்கத்தின் அடிப்படை மாற்றங்கள் மற்றும் போக்குகளைப் பிரதிபலிக்காது.

எனவே, முதன்மைப் பணவீக்கம் நாணயக் கொள்கையை நிர்ணயிப்பதிலும் நடத்துவதிலும் பயனுள்ள தகவலை வழங்கிய போதிலும் கொள்கை வகுப்போர்கள் பொருளாதாரத்தில் கேள்வி அழுத்தங்களால் உந்தப்பட்ட விலைகளை வலியுறுத்தும் போக்குகளை விளங்கிக் கொள்வது இன்றியமையாததாகும். இல்லாவிடின், இது பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை மோசமாகப் பாதிக்கக் கூடிய பிழையான கொள்கைத் தீர்மானங்களுக்கு வழியமைக்கும். எனவே, கொள்கை வகுப்பாளர்கள் அவர்களின் நாணயக் கொள்கைத் தீர்மானங்களை சிறந்த திறமையுடன், தீர்மானிப்பதற்கு விலையில் பொதுவான, தொடர்ந்து காணப்படுகின்ற, போக்கு அல்லது அதன் கீழான அசைவுகளைவிடாது பின்பற்றிச் செல்வது இன்றியமையாததாகும். ‘மையப் பணவீக்கம்’ அளவீடு பணவீக்கப் போக்குகளின் கீழுள்ளன பற்றி அத்தகைய தகவலை வழங்குகிறது.

‘மையப் பணவீக்கம்’ என்ற பதம் சமகால நாணயக் கொள்கை விளக்கத்தில் பரந்தளவில் பயன்படுத்தப்பட்ட போதிலும் அதற்கு பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாட்டு வரைவிலக்கணம் எதுவும் இருக்கவில்லை. உதாரணத்திற்கு பிறியன் மற்றும் சிசெற்றி (1993), ‘மையப் பணவீக்கம் பண வழங்கலின் வளர்ச்சி வீதத்துடன் தொடர்புபட்டுள்ளது’ எனக் குறிப்பிடுகின்றனர். குவா மற்றும் வகே (1995) மையப் பணவீக்கத்தை ‘.... உண்மை வெளியீடு மீது நடுத்தர மற்றும் நீண்ட காலத் தாக்கத்தைக் கொண்டிராத அளவிடப்பட்ட பணவீக்கத்தின் கூறு’ என வரைவிலக்கணம் செய்திருக்கையில் பிளின்டர் (1997) பணவீக்கத்தின் நீடித்திருக்கக்கூடிய’ பகுதியுடனான மையப் பணவீக்கம் என அடையாளம் காண்கிறார். மிஸ்கின் (2007) மையப் பணவீக்கத்தை ‘விலைச் சுட்டெண்களில் தளம்பலுறும் குறிப்பிட்ட கூறுகளுக்கான விலைகளின் அதிகரிப்பு வீதத்தை நீக்குகின்ற பணவீக்கத்தின் கூறு’ என வரைவிலக்கணம் செய்கிறார்.

மையப் பணவீக்கத்தினை நேரடியாக அவதானிக்க முடியாதாகையால் மையப் பணவீக்கத்தினை அளவிடுவதற்கு பல்வேறு மாற்று வழிமுறைகள் முன்மொழியப்பட்டுள்ளன[2]. வேறுபட்ட ஆராய்ச்சிமுறை நூல்களூடாகப் பெறப்பட்ட மையப் பணவீக்க அளவீடுகள் நாணயக்கொள்கையை நடத்துவதில் வெவ்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தக்கூடிய வெவ்வேறு வெளிப்பாடுகளை விளைவிக்குமென பல்வேறு அனுபவத்தால் பெறப்பட்ட ஆய்வுகள் கண்டுபிடித்துள்ளன. முறைமையியல் முறைகள் பலவற்றினுள் மையப் பணவீக்கத்தை அளவிடுவதற்கு அநேகமாக பொதுவாகப் பயன்படுத்தப்படும் அணுகுமுறை விலக்கல் முறையாகும். மையப் பணவீக்க அளவீடுகளின் அடிப்படையிலான விலக்கலின் முக்கிய அநுகூலங்கள் யாதெனில் நேர அடிப்படையில் அவற்றின் கிடைப்பனவு, வெளிப்படையான தன்மை, எளிமை, ஒப்பிடத்தக்க தன்மை என்பனவாகும். எனினும், தன்னிச்சையாக பொருட்களை நீக்கல் மையப் பணவீக்கத்தின் அளவீடுகளின் அடிப்படையிலான விலக்கலின் முக்கிய பின்னடைவாகும்.

### இலங்கையில் மையப் பணவீக்கத்தை அளவிடல்

விலை உறுதிப்பாட்டுக் குறிக்கோளை அடைவதற்கு மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் தொகுக்கப்படும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலான சராசரி மாற்றங்கள் மற்றும் ஆண்டுக்கு ஆண்டு மாற்றங்களின் அசைவால் பெரும்பாலும் வழிநடத்தப்படுகிறது. எனினும், இலங்கையில் முதன்மைப் பணவீக்கம் பெரும்பாலும் உணவு விலைகளிலான அளவுக்கதிகமான தளம்பல்கள் மற்றும் வலு மற்றும் போக்குவரத்து விலைகளில் நிருவாக ரீதியாக தீர்மானிக்கப்பட்ட மாற்றங்களிலிருந்து ஏற்படும் பாரிய மாறுபாடுகளுக்கு உட்பட்டதாகும். வானிலை நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் மாறுதலுக்குள்ளாகும் அசைவுகளை உருவாக்கும் வெளிநாட்டு விலை அதிர்வுகளின் தாக்கம் காரணமாக உணவு விலைகளிலான முக்கிய தளம்பல்கள் தற்காலிகமானதொரு காலப்பகுதிக்கு மட்டுமே தொடர்ந்திருக்கும். இத்துடன், பெரும்பாலும் வலு மற்றும் போக்குவரத்தை உள்ளடக்கும் நிருவகிக்கப்பட்ட விலைகள் நாணயக் கொள்கை நடவடிக்கைகளுக்கு பதிலிறுத்தமாட்டதென்பதுடன் அத்தகைய விலைகளின் ஒரு முறை மட்டும் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் பொதுவிலை மட்டப் போக்குகளை திரிவுபடுத்த முயலுகின்றன. அத்தகைய மாறுபடும் விடயங்கள் விலைச் சுட்டெண்ணின் குறிப்பிடத்தக்க சதவீதத்திற்கு வகை கூறுவதால் ஒட்டுமொத்த சுட்டெண்ணில் நம்பமுடியாத அசைவுகளை உருவாக்குகிறது[3]. இந் நிலைமை இலங்கையில் பணவீக்கப் போக்குகளுக்கு அடிப்படையானவற்றைக் கண்டுபிடிக்கும் பொருட்டு உயர் தளம்பல் மற்றும் அசாதாரண அதிர்வுகளிலிருந்து விடுபட்டு மையப் பணவீக்க அளவீடுகளைக் கண்காணிப்பதனை தேவைப்படுத்துகின்றது.

மத்திய வங்கி நாணயக் கொள்கையை நடத்துவதை வசதிப்படுத்துவதற்கு பல்வேறான மையப் பணவீக்க அளவீடுகளைப் பயன்படுத்தி வருகிறது. 1997இல் கொநுவிசு இல் (1952=100) நிருவகிக்கப்பட்ட விலைகளைக் கொண்டுள்ள விடயங்களை நீக்குவதன் மூலம் மையப் பணவீக்கம் பெறப்பட்டது. இதற்குப் பின்பு, பல்வேறான தொழில்நுட்பங்களின் அடிப்படையில் மையப் பணவீக்கத்தின் அளவீட்டை மேம்படுத்துவதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இவ் அளவீடுகளில் சில பொதுமக்களின் தகவலுக்காக வெளியிடப்பட்டன. 2007இல் கொநுவி சுட்டெண்ணுக்கு (2002 = 100) தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் மூலம் மொத்தச் சுட்டெண்ணில் உணவு மற்றும் வலு வகைகளை முழுமையாக நீக்கியதன் மூலம் புதிய மையப் பணவீக்கச் சுட்டெண் பெறப்பட்டதுடன் இது 2008இன் முற்பகுதியில் வெளியிடப்பட்டது.

[1] முதன்மைப் பணவீக்கம் என்பது நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் மாற்று வீதத்தைக் குறிப்பிடுவதுடன் பொருளாதாரமொன்றினுள் மொத்தப் பணவீக்கத்தை அளவிடுகிறது.

[2] மையப் பணவீக்க அளவீடுகளை திரட்டும் முறைகள் மீதான விபரமான பகுப்பாய்வு மத்திய வங்கி ஆண்டறிக்கை 2006இல் “மையப் பணவீக்கம்” என்ற சிறப்புக்குறிப்பில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

[3] எடுத்துக்காட்டாக, அதிகளவு தளம்பலுக்குட்படும் முதல் 10 விடயங்கள் மொத்தச் சுட்டெண்ணில் ஏறத்தாழ 19 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில், அதிகளவு தளம்பலுக்குட்படும் முதல் 20விடயங்கள் மொத்தச் சுட்டெண்ணில் ஏறத்தாழ 40 சதவீதத்திற்கு வகைகூறின.

தற்போதைய அளவீட்டிலுள்ள பல குறைபாடுகளைத் தீர்க்கும் அதேவேளையில், முறைமையியலை மேலும் முன்னேற்றுவதன் மூலமும் வீட்டலகு வருமானம் மற்றும் செலவின அளவீடு 2006/2007 ஐ அடிப்படையாகக் கொண்டு கொநுவி சுட்டெண்ணிற்கான உத்தேசிக்கப்பட்ட திருத்தத்துடனான புதிய மையப் பணவீக்க அளவீட்டை அறிமுகப்படுத்துவதன் மூலமும் மத்திய வங்கி சிறந்த பன்னாட்டு நடைமுறைகளின் அடிப்படையில் மையப் பணவீக்க அளவீடுகளின் தொடரைத் தொகுத்த வேளையில் ஏற்கனவேயுள்ள அளவீட்டின் பலயீனங்கள் பலவும் கட்டுப்படுத்தப்பட்டன. இவ் அளவீடுகள் புள்ளிவிபரப் பண்புகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டன[4]. அப் பெறுபேறுகள் வெவ்வேறான அளவீடுகள் மையப் பணவீக்க அளவீட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வெவ்வேறு பண்புகளை நிறைவேற்றுவதுடன் பணவீக்கத்திற்கு அடிப்படையான போக்குகளுக்கு நம்பத்தகுந்த வழிகாட்டியை வழங்குகிறது.

மையப் பணவீக்க அளவீடுகளின் தொடர்பான செயலாற்றத்துடன் ஒப்பிடுகையில் விலக்கல் முறை இலங்கைக்கான மையப் பணவீக்கத்தை கணிப்பதற்கான மிகப் பொருத்தமான முறையாகத் தோன்றுகிறது. இதன் அடிப்படையில், முதன்மைச் சுட்டெண்ணிலிருந்து உணவு, அரிசி, தேங்காய், வலு மற்றும் போக்குவரத்து' வகைகளை நீக்குவதன் மூலம் புதிய மையப் பணவீக்க அளவீடு பெறப்பட்டது. மீன், மரக்கறிகள் மற்றும் பழங்கள் போன்ற உடன் உணவு விலைகள் மற்றும் அரிசி மற்றும் தேங்காய் போன்ற ஏனைய உணவுப் பொருட்களின் விலைகள் மற்றும் நிருவாக ரீதியாகத் தீர்மானிக்கப்பட்ட வலு மற்றும் போக்குவரத்து விலைகள் என்பவற்றிலான உயர் தளம்பலைக் கவனத்திற் கொள்கையில் இவ் வகைகளை மாத்திரம் விலக்குதல் பொருத்தமானதாகும். இவ் அளவீடு குறிப்பாக விலக்கலின் அளவு மற்றும் விலக்களிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன் இணங்கிக் காணப்படுகிறது. இது, பிரதிநிதித்துவப்படுத்தும் மையப் பணவீக்க அளவீட்டின் பல புள்ளிவிபரப் பிரமாணங்களையும் நிறைவேற்றுவதுடன் முதன்மைப் பணவீக்கத்தில் பொதுவான போக்கை பரந்தளவில் பின்பற்றுகிறது.

முதன்மைப் பணவீக்கத்தைவிட மையப் பணவீக்கம் பணவீக்கத்தின் தொடர்ச்சியான அசைவுகள் பற்றி கூடிய தகவலை வழங்குவதால் புதிய மையப் பணவீக்க அளவீடுகள் மத்திய வங்கியால் நாணயக் கொள்கையை நடத்துவதை வசதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் எளிமை மற்றும் கணிப்பிடும் தன்மை என்பவற்றைக் கவனத்திற் கொள்கையில் இவ் அளவீடு பொதுமக்களால் நன்றாக விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருப்பதால் பணவீக்கம் மீதான அவர்களின் எதிர்பார்ப்புகளை முகாமை செய்வதற்கு உதவுகிறது. எனினும், விலை உறுதிப்பாடு ஒட்டுமொத்த முதன்மைப் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபடுவதால் மத்திய வங்கி முதன்மைப் பணவீக்கத்தில் தொடர்ந்து கவனம் செலுத்தும் அதேவேளையில் பொருளாதாரத்தில் பணவீக்க இயக்கவாற்றலை இயக்கும் விசைகளின் முழுமையானதும் கவனமானதுமான பகுப்பாய்வை உறுதிப்படுத்துவதற்கு மையப் பணவீக்கத்தின் போக்குகளும் கண்காணிக்கப்படுகின்றன.

**சி.கு அட்டவணை 6.1** **முதன்மை மற்றும் மையப் பணவீக்க அளவீடுகளிலான அசைவுகள் (சதவீத மாற்றம்)**

| காலப்பகுதி | முதன்மைப் பணவீக்கம் | | மையப் பணவீக்கம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | தற்போதைய அளவீடு[1] | | புதிய அளவீடு[2] | |
| | ஆண்டுக்கு ஆண்டு | ஆண்டுச் சராசரி | ஆண்டுக்கு ஆண்டு | ஆண்டுச் சராசரி | ஆண்டுக்கு ஆண்டு | ஆண்டுச் சராசரி |
| திசெ 04 | 13.0 | 9.0 | 9.9 | 9.1 | 9.7 | 8.2 |
| திசெ 05 | 7.4 | 11.0 | 9.2 | 10.3 | 8.5 | 10.8 |
| திசெ 06 | 13.5 | 10.0 | 8.6 | 8.5 | 12.4 | 9.7 |
| திசெ 07 | 18.8 | 15.8 | 8.1 | 7.7 | 17.0 | 12.8 |
| திசெ 08 | 14.4 | 22.6 | 15.7 | 13.6 | 13.3 | 19.5 |
| மார்சு 09 | 5.3 | 18.7 | 14.2 | 15.2 | 8.1 | 16.7 |
| யூன் 09 | 0.9 | 12.5 | 7.7 | 15.2 | 6.3 | 12.9 |
| செத் 09 | 0.7 | 6.6 | 5.4 | 12.1 | 5.8 | 9.1 |
| திசெ 09 | 4.8 | 3.4 | 5.9 | 9.2 | 5.8 | 7.0 |

1 கொநுவிசு இன் (2002 = 100) உணவு மற்றும் வலு வகைகளை விலக்குகிறது, மொத்தச் சுட்டெண்ணின் 54.9 சதவீதத்திற்கு வகை கூறுகிறது.

2 கொநுவிசு (2002 = 100) இன் உடன் உணவு, அரிசி, தேங்காய், வலு மற்றும் போக்குவரத்து வகைகளை விலக்குகிறது, மொத்தச் சுட்டெண்ணின் 31.1 சதவீதத்திற்கு வகை கூறுகிறது.

**உசாத்துணைகள்**

பிலின்டர், ஏ. (1997), 'மத்திய வங்கியாளர்களுக்கான குறுகிய கால பணவீக்கம் பற்றிய விளக்கவுரை', சென்லூயிஸ் *பெடரல் றிசேவ் பாங்க் மீளாய்வு,* மே/யூன் பக்கம் 157-160

பிறயன், மைக்கல் எவ்., மற்றும் ஸ்ரிபன் ஜீ.சிசெற்றி(1993), 'மையப் பணவீக்கத்தை அளவிடல்' என்பிஈஆர், செயற்பாட்டுக் கட்டுரை இல. 4303, பொருளியல் ஆராய்ச்சித் தேசிய பணியகம், கேம்பிறிட்ஜ்

மிஸ்கின், பிடெறிக் எஸ். (2007), 'நாணயக் கொள்கையை நடத்துவதில் முதன்மை எதிர் மையப் பணவீக்கம் வியாபார வட்டத்தில் குறிப்புக்கள் பன்னாட்டு பரிமாற்றல் செய்முறை மற்றும் பேரண்டப் பொருளாதார கொள்கைகள் மாநாடு. மொன்றியல், ஒத்தோபர் 2007

குவா, டனி மற்றும் சவுன், பி. வகீ (1995), 'மையப் பணவீக்கத்தை அளவிடல்', *பொருளாதார சஞ்சிகை,* தொகுதி 105 (செத்தெம்பர்), பக்கம் 1130-44

[2] மையப் பணவீக்க அளவீடுகளை திரட்டும் முறைகள் மீதான விபரமான பகுப்பாய்வு மத்திய வங்கி ஆண்டறிக்கை 2006இல் "மையப் பணவீக்கம்" என்ற சிறப்புக்குறிப்பில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

[3] எடுத்துக்காட்டாக, அதிகளவு தளம்பலுக்குட்படும் முதல் 10 விடயங்கள் மொத்தச் சுட்டெண்ணில் ஏறத்தாழ 19 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில், அதிகளவு தளம்பலுக்குட்படும் முதல் 20விடயங்கள் மொத்தச் சுட்டெண்ணில் ஏறத்தாழ 40 சதவீதத்திற்கு வகைகூறின.

[4] மையப் பணவீக்கத்தின் தளம்பல்' முதன்மைப் பணவீக்கம், மையப் பணவீக்கம் மற்றும் பண நிரம்பலுக்கிடையேயான நீண்டகால தொடர்புகளும் காரணகாரியத் தொடர்களும், மையப் பணவீக்க அளவீடுகளின் ஊகிக்கும் ஆற்றல் போன்ற விடயங்களில் குறிப்பிடப்பட்ட புள்ளிவிபரப் பிரமாணங்கள் பரீட்சிக்கப்பட்டன.

**புதிய வரிகள் மற்றும் தீர்வைகளும் விலைகள் மீது தாக்கத்தைக் கொண்டிருந்தன.** 2009 சனவரி 15 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அரசால் மேற்கொள்ளப்பட்ட தொலைபேசிக் கட்டணங்கள் மீது நிலையாகப் பொருத்தப்பட்ட வாடிக்கையாளர் தீர்வை என்ற புதிய வரியின் அறிமுகம் மற்றும் 2009 மாச்சிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 1 சதவீத தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் கொநுவி சுட்டெண் மீது நேரடித் தாக்கத்தைக் கொண்டிருந்தது. தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 2009 மேயிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 3 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. 2009 பெப்புருவரி 15 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட்ட நீர்க் கட்டணத்திலான அதிகரிப்பும் சுட்டெண்ணிலான அதிகரிப்பிற்குப் பங்களிப்புச் செய்தது.

**சுட்டெண்ணிலான அதிகரிப்புக்கான ஏனைய குறிப்பிடத்தக்க பங்களிப்புகள் நலம், பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் மற்றும் கல்விக்கு ஒதுக்கப்பட்ட நிறைகள் சார்பு ரீதியில் குறைவாக இருந்த போதிலும் இவை 2009இல் ஒட்டுமொத்த ஆண்டிறுதி ஆண்டுச் சராசரி அதிகரிப்பிற்கு முறையே 19.3 சதவீதம், 10.7 சதவீதம் மற்றும் 9.3 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்தன.** நலத் துணைச் சுட்டெண்ணிலான அதிகரிப்பு பெரும்பாலும் தனியார் மருத்துவமனைகள், மருந்துகள், நிபுணத்துவ ஆலோசனைகள் மற்றும் மருத்துவ ஆய்வுகூடப் பணிகளால் வழங்கப்படும் பணிகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புகளால் ஏற்பட்டது. சுற்றுலாக் கட்டணங்கள் மற்றும் தனியார் கல்விக் கட்டணங்களில் ஏற்பட்ட அதிகரிப்புகள் முறையே பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் மற்றும் கல்வித் துணைக் குழுக்களை மேல் நோக்கி அசையச் செய்தன. இதேவேளை, போக்குவரத்து துணைக் குழு ஆண்டுச் சராசரிப் பணவீக்கத்திற்கு 2.1 சதவீதம் கொண்ட எதிர்க்கணிய சராசரிப் பங்களிப்பைப் பதிவு செய்தது. எரிபொருள் விலைகள் மற்றும் பொதுப் போக்குவரத்துக் கட்டணங்களில் மேற்கொள்ளப்பட்ட கீழ் நோக்கிய மீளாய்வுகள் போக்குவரத்துத் துணைக் குழு பணவீக்கத்திற்கு எதிர்க்கணியமாக பங்களிப்புச் செய்வதற்கு வழியமைத்தது. ஏனைய அனைத்து துணைக் குழுக்களின் பங்களிப்பு 1.9 சதவீதத்திற்கும் 6.6 சதவீதத்திற்குமிடையேயான வீச்சில் காணப்பட்டது.

**2002 இலிருந்து 2006/ 2007 வரையான கொநுவி சுட்டெண்ணின் அடிப்படை ஆண்டு 2010இல் திருத்தியமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.** வருமான மட்டங்களிலான மேம்பாடு காரணமாக வீட்டு அலகுகளின் நுகர்வு மாதிரிகளிலான மிக அண்மைய மாற்றங்கள் மற்றும் காலத்திற்குக் காலம் நுகர்வோர் சுவை மற்றும் விருப்பத்தேர்விலான மாற்றங்களைப் பிரதிபலிக்கும் வகையில், 2006/2007 இல் நடத்தப்பட்டட வீட்டலகு வருமானம் மற்றும் செலவின அளவீட்டின் அடிப்படையில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் கொநுவி சுட்டெண் கூடையிலுள்ள பொருட்களையும் அவற்றின் நிறைகளையும் புதுப்பிப்பதற்கு ஆரம்ப நடவடிக்கையை மேற்கொண்டது. கொநுவி சுட்டெண்ணின் புதுப்பிக்கப்பட்ட பதிப்பு 2010இல் வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மொத்த விற்பனை விலைச்சுட்டெண் (மொவிசு)

**மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணால் அளவிடப்படும் முதனிலைச் சந்தை மட்டத்திலான பணவீக்கம் 2009இல் உயர் தளம்பலைக் காட்டியது.** 2009இன் முதல் ஒன்பது மாதங்களில் புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் பணச்சுருக்கப் போக்கு அவதானிக்கப்பட்டது. 2008 மேயில் 42.1 சதவீதம் கொண்ட உச்ச மட்டத்தில் விளங்கிய மொவிசு இன் புள்ளிக்குப் புள்ளி அதிகரிப்பு 2009 செத்தெம்பரில் -0.4 சதவீதத்திற்கு படிப்படியாக மெதுவடைந்தது. இதற்குப் பின்பு இப் போக்கு நேர்மாறாகியதுடன் 2009 இறுதியில் மொவிசு இன் புள்ளிக்குப் புள்ளி அதிகரிப்பு 13.3 சதவீதத்தை அடைந்தது.

**ஆண்டுச் சராசரி அடிப்படையில் மொவிசுட்டெண் 2009 இறுதியில் 4.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** உணவுக்கான துணைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி அதிகரிப்பு 0.6 சதவீதமாக விளங்கியது. பெற்றோலியம், உலோக உற்பத்திகள், மின்சாதனங்கள் மற்றும் பல்வகைப் பொருட்களுக்கான துணைச் சுட்டெண்கள் 2009இல் ஆண்டுச் சராசரி அடிப்படையில் முறையே 22.8 சதவீதத்தாலும் 7.6 சதவீதத்தாலும் 1.0 சதவீதத்தாலும் 24.4 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. மொவிசு இன் மூலங்களின் படியான வகைப்படுத்தலை கவனத்திற் கொள்கையில், இவ்வாண்டில் உள்நாட்டு வகை ஆண்டுச் சராசரி அடிப்படையில் 3.5 சதவீதத்தால் மிதமானளவில் அதிகரித்திருக்கையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வகைகளிலான விலைகள் முறையே 10.9 சதவீதம் மற்றும் 6.7 சதவீத வீழ்ச்சிகளைப் பதிவு செய்து அநேகமாக பன்னாட்டு விலை விருத்திகளே மொவிசுட்டெண் மீது கீழ் நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தியதை எடுத்துக்காட்டியது. கோதுமைத் தானியம், கோதுமை மா, மண்ணெண்ணெய், டீசல், பெற்றோல் மற்றும் பால் மா என்பவற்றிலான விலை வீழ்ச்சிகள் இறக்குமதித் தொகுதிக்கான விலைகளின் வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்திருக்கையில் தேங்காய், தேங்காய் எண்ணெய் மற்றும் இறப்பரிலான விலை வீழ்ச்சிகள் ஏற்றுமதித் தொகுதியில் வீழ்ச்சியை ஏற்படுத்தின. மொவிசு இன் முடிவுப் பயன்பாட்டு வகைப்படுத்தலை கவனத்திற் கொள்கையில் ஆண்டிறுதியில் ஆண்டுச் சராசரி அடிப்படையில் இடைநிலைத் தொகுதியிலான விலைகள் 21.8 சதவீதத்தால் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்திருக்கையில் நுகர்வு மற்றும் முதலீட்டுத் தொகுதிகளிலான விலைகள் முறையே 2.6 சதவீதம் மற்றும் 2.4 சதவீத அதிகரிப்புகளைப் பதிவு செய்தன. புகையிலை, கோதுமைத் தானியம், மண்ணெண்ணெய், டீசல், கொக்கோ, இறப்பர் மற்றும் காவலியிடப்பட்ட கம்பியின் விலைகளிலான வீழ்ச்சி இடைநிலை வகையிலான விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பொறுப்பாகவிருந்தன.

## மொத்த உள்நாட்டு உற்பத்திச் (மொஉஉ) சுருக்கி

**பணவீக்கத்தின் மாற்று அளவீடான மொஉஉ சுருக்கி 2008இல் பதிவு செய்யப்பட்ட 16.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஒட்டுமொத்த விலை அதிகரிப்பில் 2009இல் 5.7 சதவீத மெதுவடைவை எடுத்துக்காட்டியது.** கடந்த இரண்டு ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட போக்கிற்கு முரணாக வேளாண்மைத்துறை 2008இல் பதிவு செய்யப்பட்ட 31.3 சதவீதம் கொண்ட உயர் வீதத்துடன் ஒப்பிடுகையில் -0.2 சதவீதம் கொண்ட ஆகக் குறைந்த பணவீக்க வீதத்தைப் பதிவு செய்தது. பணிகள் துறையில் பதிவு செய்யப்பட்ட 6.7 சதவீதம் கொண்ட ஆகக் கூடிய பணவீக்க வீதம் கடந்த ஆண்டில் இத் துறையால் பதிவு செய்யப்பட்ட 14.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் கணிசமானளவில் குறைவானதாகும். கைத்தொழிற் துறையின் பணவீக்கமும் 2008இன் 14.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2009இல் 6.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**அட்டவணை 4.4** துறைரீதியான சுருக்கிகளும் மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியும்

| துறை | சுட்டெண் 2007 (அ) | சுட்டெண் 2008 | சுட்டெண் 2009(ஆ) | சதவீத மாற்றம் 2008/2007 (அ) | சதவீத மாற்றம் 2009/2008(ஆ) |
|---|---|---|---|---|---|
| வேளாண்மை | 260.7 | 342.2 | 342.6 | 31.3 | -0.2 |
| கைத்தொழில் | 266.1 | 304.0 | 322.3 | 14.2 | 6.2 |
| பணிகள் | 249.3 | 285.1 | 304.1 | 14.4 | 6.7 |
| மொ.உ.உ | 256.4 | 298.3 | 315.0 | 16.3 | 5.7 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள் : தொகைமதிப்புப் புள்ளிவிபர திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## 4.3 கூலிகள்

**அரச மற்றும் தனியார்துறை ஊழியர்கள் இரு பகுதியினரதும் கூலிகள் 2009இல் பெயரளவு நியதிகளில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன.** அரச துறையின் கூலி வீதச் சுட்டெண்கள், முறைசார்ந்த தனியார் துறையின் (கூலி நிர்ணய சபை வர்த்தகத்தின் ஆளுமைக்குட்பட்ட கூலிகள்) மற்றும் முறைசாராத் தனியார் துறையின் நாளாந்தக் கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2009இல் பெயரளவு நியதிகளில் அதிகரிப்புகளைப் பதிவு செய்தன. இதேவேளை, இவ் ஊழியர்கள் முக்கியமாக பணவீக்கத்திலான மெதுவடைவு காரணமாக அவர்களின் உண்மைக் கூலிகளில் அதிகரிப்பை அனுபவித்தனர்.

### அரச துறைக் கூலிகள்

**அரச துறையின் உண்மைக் கூலிகள் 2009இல் அதிகரித்தன.** வீழ்ச்சியடைந்து செல்லும் பணவீக்கம் மற்றும் இவ்வாண்டில் இரு தடவைகளில் அரச துறை ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட மாதாந்த வாழ்க்கைப்படியில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கத்தால் அதிகரித்த பெயரளவுக் கூலிகள் என்பவற்றுடன் 2008இல் அரச துறை ஊழியர்கள் பாதிப்புக்குள்ளான உண்மைக் கூலி இழப்புகளுடன் ஒப்பிடுகையில் 2009இல் இவ் ஊழியர்களின் அனைத்து வகை உண்மைக்கூலி வீத சுட்டெண்களில் குறிப்பிடத்தக்க ஆதாயம் காணப்பட்டது. நிறைவேற்றுத் தரமல்லா ஊழியர்கள், பள்ளிக்கூட ஆசிரியர்கள் மற்றும் சிற்றூழியர்களின் கூலிகளை உள்ளடக்கிய அரச துறை ஊழியர்களின் பெயரளவு கூலி வீதச் சுட்டெண்களிலான அதிகரிப்பு 2009 சனவரி மற்றும் 2009 நவெம்பரில் நடைமுறைக்கு வரும் வகையில் அரச துறை ஊழியர்களுக்கு முறையே ரூ.1,000/- ஆலும் ரூ. 750/- ஆலும் மாதாந்த வாழ்க்கைப்படியை அதிகரித்தமையால் ஏற்பட்டதாகும். இம் மேல் நோக்கிய மீளாய்வுகளுடன் அரச பணி, மாகாண அரச பணி மற்றும் ஆயுதப் படைகளிலுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் செலுத்தத்தக்க மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படி தற்போதைய மட்டமான ரூ. 3,500/- இலிருந்து 2009இல் ரூ.5,250/- இற்கு அதிகரித்தது. இது போலவே, நாளாந்தக் கூலிகளைப் பெறும் அரச ஊழியர்களுக்குச் செலுத்தத்தக்க வாழ்க்கைப்படி தற்போதைய வீதமான ரூ.116.66/- இலிருந்து 2009இல் ரூ.150/- இற்கும் பின்பு 2009 நவெம்பரில் ரூ.175/- இற்கும் மேலும் அதிகரிக்கப்பட்டது. இவ் அதிகரிப்புக்கள் காரணமாக அரச ஊழியர்களின் ஒட்டுமொத்த பெயரளவுக் கூலி வீதச் சுட்டெண் 9.4 சதவீதத்தால் அதிகரித்தது. இதன்படி, சராசரியாக, நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர்கள், சிற்றூழியர்கள் மற்றும் அரச பள்ளிக்கூட ஆசிரியர்களின் கூலிச் சுட்டெண்கள் 2008இல் பதிவு செய்யப்பட்ட 7-8 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் 2009இல் முறையே 8.9 சதவீதத்தாலும், 10.0 சதவீதத்தாலும் 9.4 சதவீதத்தாலும் உயர்வடைந்தன. பெயரளவுக் கூலி அதிகரிப்புகளிலான அபிவிருத்திகள் மற்றும் பணவீக்கத்திலான மெதுவடைவின் இணைந்த விளைவு காரணமாக அரச ஊழியர்கள் 2009இல் அவர்களின் உண்மைக் கூலிகளில் அதிகரிப்பை அனுபவித்தனர். இதன்படி, நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர்கள், சிற்றூழியர்கள் மற்றும் அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் 2008இல் அனுபவித்த 12.2 - 12.5 சதவீத வீச்சிலான உண்மைக் கூலி இழப்புகளுடன் ஒப்பிடுகையில் 2009இல் முறையே 5.3 சதவீதம், 6.3 சதவீதம் மற்றும் 5.7 சதவீதம் கொண்ட உண்மைக் கூலி அதிகரிப்பை அனுபவித்தனர். இதனால், மத்திய அரச ஊழியர்களின் ஒட்டுமொத்த உண்மைக் கூலி வீதச் சுட்டெண் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5.7 சதவீதத்தால் அதிகரித்தது.

**அட்டவணை 4.5** கூலிவீதச் சுட்டெண்கள்

(திசெம்பர் 1978=100)

| தொழில்நிலை வகை | சுட்டெண் பெயரளவு 2007 | சுட்டெண் பெயரளவு 2008 | சுட்டெண் பெயரளவு 2009 (ஆ) | சுட்டெண் உண்மையான (அ) 2007 | சுட்டெண் உண்மையான (அ) 2008 | சுட்டெண் உண்மையான (அ) 2009 (ஆ) | சதவீத மாற்றம் பெயரளவு 2007 | சதவீத மாற்றம் பெயரளவு 2008 | சதவீத மாற்றம் பெயரளவு 2009 (ஆ) | சதவீத மாற்றம் உண்மையான (அ) 2007 | சதவீத மாற்றம் உண்மையான (அ) 2008 | சதவீத மாற்றம் உண்மையான (அ) 2009(ஆ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. அரச ஊழியர்கள் | | | | | | | | | | | | |
| மத்திய அரச ஊழியர்கள் | 3,828.4 | 4,116.1 | 4,502.9 | 171.6 | 150.4 | 159.0 | 21.5 | 7.5 | 9.4 | 5.0 | -12.4 | 5.7 |
| நிறைவேற்றுத்தரமல்லாதோர் | 3,493.4 | 3,749.5 | 4,082.4 | 156.6 | 137.0 | 142.2 | 22.4 | 7.3 | 8.9 | 5.7 | -12.5 | 5.3 |
| சிற்றூழியர்கள் | 4,172.7 | 4,494.7 | 4,943.5 | 187.0 | 164.2 | 174.6 | 20.5 | 7.7 | 10.0 | 4.1 | -12.2 | 6.3 |
| அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் | 2,740.0 | 2,938.6 | 3,215.3 | 122.8 | 107.4 | 113.5 | 18.9 | 7.2 | 9.4 | 2.7 | -12.5 | 5.7 |
| 2. கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | | | | | | | | | | | | |
| அனைத்து வர்க்கத்திலுள்ள தொழிலாளர்கள் | 1,648.8 | 2,070.4 | 2,171.4 | 73.6 | 75.5 | 76.7 | 21.4 | 25.6 | 4.9 | 4.1 | 2.6 | 1.6 |
| வேளாண்மைத் தொழிலாளர்கள் | 1,821.4 | 2,286.6 | 2,349.4 | 81.3 | 83.5 | 83.0 | 16.2 | 25.5 | 2.7 | -0.3 | 2.6 | -0.6 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | 1,522.4 | 1,877.5 | 2,,054.0 | 67.9 | 68.5 | 72.5 | 39.6 | 23.3 | 9.4 | 19.6 | 0.9 | 5.8 |
| பணிகளிலுள்ள தொழிலாளர்கள் | 1,057.1 | 1,370.8 | 1,545.8 | 47.1 | 49.9 | 54.6 | 35.6 | 29.7 | 12.8 | 16.0 | 5.9 | 9.4 |

(அ) உண்மைக் கூலிவீதச்சுட்டெண் கொநுவிசு (2000=100) இனை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள் : தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## முறைசார்ந்த தனியார்துறைக் கூலிகள்

**முறைசார்ந்த தனியார்துறைக் கூலிகளின் அசைவுகள் கூலி நிர்ணயச் சபை வர்த்தகத்தின் கீழான ஒழுங்குவிதிகளால் நிருவகிக்கப்படுகின்ற கூலிகளைக் கொண்ட ஊழியர்களின் ஆகக் குறைந்த கூலிகளை உள்ளடக்கிய ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண்களினூடாக கண்காணிக்கப்படுகின்றன.** வேளாண்மை, கைத்தொழில் மற்றும் வர்த்தகம், பணிகள் ஆகிய முறைசார்ந்த தனியார் துறையின் மூன்று முக்கிய துறைகளினதும் ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண்கள் பெயரளவு நியதிகளில் 2009இல் முறையே 2.7 சதவீதத்தாலும் 9.4 சதவீதத்தாலும் 12.8 சதவீதத்தாலும் அதிகரித்த வேளையில் பெயரளவு நியதிகளில் அனைத்து வகைகளுக்கான பொதுவான கூலி வீதச் சுட்டெண் 2008 உடன் ஒப்பிடுகையில் 4.9 சதவீதம் கொண்ட பெயரளவு அதிகரிப்பைப் பதிவு செய்தது. இவ் அதிகரிப்பு பெரும்பாலும் 2008 யூலையில் கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறையிலும், பணிகள் துறையிலும் உள்ள தொழிலாளர்களின் ஆகக் குறைந்த கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்புகளால் ஏற்பட்டது.

**பெயரளவு கூலி வீதச் சுட்டெண்கள் பணவீக்கத்திற்காக சீராக்கம் செய்யப்படும் பொழுது 2009இல் கைத்தொழில் மற்றும் வர்த்தகம் மற்றும் பணிகள் துறைகளிலுமுள்ள ஊழியர்கள் அவர்களது உண்மைக் கூலிகளில் அதிகரிப்புக்களை அனுபவித்தனர்.** கூலி நிர்ணயச் சபை வர்த்தகங்களிலுள்ள ஊழியர்களுக்கான ஒட்டுமொத்த உண்மைக் கூலி வீதச் சுட்டெண் பணவீக்க வீதத்திலான கூர்மையான மெதுவடைவின் முக்கிய காரணத்தால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2009இல் சராசரியாக 1.6 சதவீதத்தால் அதிகரித்தது. பணிகள்துறை, கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறையிலுள்ள ஊழியர்கள் மீளாய்விற்குரிய காலப்பகுதியில் அவர்களது உண்மைக் கூலிகளில் முறையே 9.4 சதவீதம் மற்றும் 5.8 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பை அனுபவித்தனர். எனினும், வேளாண்மைத் துறையிலுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலிகள் முன்னைய ஆண்டின் 2.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2009இல் 0.6 சதவீதத்தால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது.

## முறைசாராத் தனியார்துறைக் கூலிகள்

**கிரமமான அளவீட்டின் அடிப்படையில் தொகுக்கப்படும் முறைசாராத் தனியார் துறையிலுள்ள அனைத்துச் செயற்பாடுகளுக்கான பெயரளவுக் கூலிகள் பெயரளவு நியதிகளில் அதிகரித்தன.** பொதுவாக, முறைசாராத் துறையிலான கூலிகள் பொருளாதாரத்தில் கேள்வி மற்றும் வழங்கல் நிபந்தனைகள் இரண்டையும், தொழிலாளர்களின் ஒதுக்குமட்ட கூலிகளையும் பிரதிபலிக்கும் வகையில் சீராக்கத்திற்குள்ளாகின்றன. நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் கீழ் சேகரிக்கப்பட்ட வேளாண்மை மற்றும் கட்டடவாக்கத் துறைகளுக்கான முறைசாராத் தனியார் துறையின் நாளாந்தக் கூலிகள் பற்றிய தகவல் 2009இல் கூலி வீதங்களில் பெயரளவு வளர்ச்சியை வெளிப்படுத்தின. வேளாண்மை மற்றும் கட்டுமானத் துறைகளில் முறைசாராத் துறைக் கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 10.0 சதவீதத்தாலும் 11.1 சதவீதத்தாலும் அதிகரித்தன. வேளாண்மைத் துறையினுள், நெல், தெங்கு, இறப்பர் மற்றும் தேயிலைத் துணை வகைகளின் சராசரி நாளாந்தக் கூலிகள் 2008 உடன் ஒப்பிடுகையில் 2009இல் முறையே 8.4 சதவீதத்தாலும் 10.1 சதவீதத்தாலும் 8.0 சதவீதத்தாலும் 14.2 சதவீதத்தாலும் அதிகரித்தன. வேளாண்மைத் துறையில் அநேகமான துணை வகைகளின் நாளாந்தக் கூலிகளிலான அதிகரிப்பு வீதம் பல்வேறு செயற்பாடுகளிடையேயான பல்வகைப்படுத்தல் மற்றும் தொழிலாளர்களின் வழங்கல் காரணமாக பகுதியளவில் வேறுபட்டன. இத்துடன் குறிப்பிட்ட மட்டத்தில் தொழிலாளர்களின் உண்மைக் கூலிகளைப் பேணும் பொருட்டு உயர்ந்தளவு நாளாந்த கூலிக்காக இவர்களால் முன் வைக்கப்பட்ட கேள்வியும் கூலி வீதங்களில் தாக்கத்தைத்

**அட்டவணை 4.6**

**துறை மற்றும் பால் அடிப்படையில் முறைசாரா தனியார்துறையின் நாளாந்தக் கூலிகள் (அ)**

| துறை | ஆண்டுச் சராசரி (ரூபா) | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | பெயரளவு | | உண்மையான (ஆ) | |
| | 2007 | 2008 | 2009(இ) | 2008 | 2009(இ) | 2008 | 2009(இ) |
| **1. வேளாண்மைத்துறை** | | | | | | | |
| **தேயிலை** | | | | | | | |
| ஆண் | 375 | 440 | 495 | 17.4 | 12.6 | -4.2 | 8.8 |
| பெண் | 263 | 304 | 355 | 16.1 | 16.5 | -5.2 | 12.6 |
| **இறப்பர்** | | | | | | | |
| ஆண் | 389 | 498 | 532 | 28.4 | 6.5 | 4.8 | 2.9 |
| பெண் | 277 | 374 | 416 | 36.3 | 10.1 | 11.2 | 6.4 |
| **தெங்கு (ஈ)** | | | | | | | |
| ஆண் | 479 | 590 | 652 | 23.1 | 10.5 | 0.5 | 6.8 |
| **நெல்** | | | | | | | |
| ஆண் | 456 | 563 | 615 | 23.2 | 9.11 | 0.5 | 5.8 |
| பெண் | 336 | 392 | 423 | 17.6 | 7.0 | -4.0 | 3.5 |
| **2. கட்டடவாக்கத்துறை (ஈ)** | | | | | | | |
| **மரவேலையாள்** | | | | | | | |
| முதன்மை மரவேலையாள் - ஆண் | 732 | 844 | 932 | 15.3 | 10.4 | -5.9 | 6.7 |
| தேர்ச்சிபெற்ற, தேர்ச்சியற்ற உதவியாளர் - ஆண் | 479 | 558 | 617 | 16.6 | 10.6 | -4.9 | 6.9 |
| **கொத்தனார்** | | | | | | | |
| முதன்மை கொத்தனார் - ஆண் | 727 | 838 | 935 | 15.1 | 11.7 | -6.1 | 8.0 |
| தேர்ச்சிபெற்ற, தேர்ச்சியற்ற உதவியாளர் - ஆண் | 474 | 561 | 627 | 18.4 | 11.7 | -3.4 | 8.0 |

(அ) கூலித்தகவல்கள் 90 நிலையங்களிருந்தான மாதாந்த கூலிகளை அடிப்படையாகக் கொண்டவை.
(ஆ) உண்மைக் கூலி சதவீத மாற்றங்கள் கொநுவி(2002=100) இனை அடிப்படையாக கொண்டவை.
(இ) தற்காலிகமானவை
(ஈ) தெங்கு மற்றும் நிருமாணத்துறைகளில் பெண் பங்கேற்பு குறைவாகும்.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

கொண்டிருந்தது. இது போலவே, இவ்வாண்டின் பிற்பகுதியில் குறிப்பாக தேயிலை மற்றும் இறப்பர் உள்ளிட்ட சில ஏற்றுமதிப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு வழங்கப்பட்ட தொழிலாளர் பணிக்கான உயர் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு உற்பத்தியாளர்களை இயலச் செய்தது. வேளாண்மைத் துறை மற்றும் கட்டுமானத் துறையிலுள்ள அனைத்துத் துணை வகைகளிலுமுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு 2009இல் பதிவு செய்யப்பட்டது. இதன்படி, வேளாண்மைத் துறையிலுள்ள தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் நெல் துணைத் துறைகளின் நாளாந்த உண்மைக் கூலி சராசரியாக முறையே 10.4 சதவீதத்தாலும் 4.4 சதவீதத்தாலும் 6.5 சதவீதத்தாலும் 4.8 சதவீதத்தாலும் அதிகரித்தது. இதேவேளை, கட்டுமானத் துறையிலுள்ள மரவேலை மற்றும் கொத்தனாருக்கான கூலி குறிப்பிட்ட துறைகளில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் பற்றாக்குறைகள் காரணமாக முறையே 7 - 8 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. இது, 2008இல் இவ் ஊழியர்களால் பாதிப்படைந்த உண்மைக் கூலி இழப்புகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக விளங்கியது.

## 4.4 குடித்தொகை,தொழிற்படை மற்றும் தொழில்நிலை

### குடித்தொகை

**2009இல் நடுவாண்டுக் குடித்தொகை 20.45 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் 2008இல் பதிவு செய்யப்பட்ட 1.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1.1 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது.** அனைத்து மாவட்டங்களிலும் குடித்தொகை 2009இல் அதிகரித்தது. குடித்தொகையிலான உயர் அதிகரிப்புக்கள் கொழும்பு, கண்டி, குருணாகல், இரத்தினபுரி, கம்பகா, பதுளை, காலி மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டதுடன் இவை எல்லாம் சேர்ந்து 2009இன் மொத்த வளர்ச்சிக்கு 55 சதவீதத்திற்கும் கூடுதலாக பங்களிப்புச் செய்தன.

### தொழிற்படை

**காலாண்டுத் தொழிற்படை அளவீட்டின்படி[1], வேலை செய்யக்கூடிய, வேலை செய்ய விரும்புகின்ற 10 வயதிற்கும் அதற்கு மேற்பட்ட ஆட்களையும் உள்ளடக்குகின்றது என வரைவிலக்கணம் செய்யப்பட்ட தொழிற்படையானது கடந்த ஆண்டின் 8.08 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2009இல் 8.07 மில்லியனுக்கு 0.1 சதவீதத்தால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது.** இதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரு மாகாணங்கள் நீங்கலான தொழிற்படை 2009இல் 7.57 மில்லியன் கொண்ட அதே மட்டத்திலேயே தொடர்ந்து காணப்பட்டது.

**அட்டவணை 4.7**
**மாவட்ட அடிப்படையில் குடித்தொகை**

'000ஆட்கள்

| மாவட்டம் | 2008 | 2009 (அ) | மாற்றம்(அ) | சதவீத மாற்றம்(அ) |
|---|---|---|---|---|
| கொழும்பு | 2,488 | 2,521 | 33 | 1.3 |
| கண்டி | 1,396 | 1,415 | 19 | 1.4 |
| இரத்தினபுரி | 1,099 | 1,113 | 14 | 1.3 |
| பதுளை | 861 | 874 | 13 | 1.5 |
| குருநாகல் | 1,535 | 1,550 | 15 | 1.0 |
| கம்பகா | 2,152 | 2,165 | 13 | 0.6 |
| காலி | 1,063 | 1,074 | 11 | 1.0 |
| அநுராதபுரம் | 809 | 820 | 11 | 1.4 |
| களுத்துறை | 1,118 | 1,128 | 10 | 0.9 |
| மாத்தறை | 822 | 831 | 9 | 1.1 |
| நுவரெலியா | 749 | 755 | 6 | 0.8 |
| அம்பாறை | 624 | 634 | 10 | 1.6 |
| மட்டக்களப்பு | 530 | 537 | 7 | 1.3 |
| புத்தளம் | 760 | 770 | 10 | 1.3 |
| யாழ்ப்பாணம் | 603 | 607 | 4 | 0.7 |
| மாத்தளை | 483 | 490 | 7 | 1.4 |
| திருகோணமலை | 361 | 368 | 7 | 1.9 |
| அம்பாந்தோட்டை | 558 | 565 | 7 | 1.3 |
| மொனராகல | 430 | 435 | 5 | 1.2 |
| பொலனறுவை | 400 | 405 | 5 | 1.3 |
| முல்லைத்தீவு | 150 | 154 | 4 | 2.7 |
| கிளிநொச்சி | 150 | 154 | 4 | 2.7 |
| வவுனியா | 167 | 169 | 2 | 1.2 |
| கேகாலை | 807 | 813 | 6 | 0.7 |
| மன்னார் | 102 | 103 | 1 | 1.0 |
| மொத்தம் | 20,217 | 20,450 | 233 | 1.1 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை

மூலம் : பதிவாளர் நாயகத்தின் திணைக்களம்

**மொத்த தொழிற்படை 7.60 மில்லியன் தொழிலுள்ளவர்களையும் 0.47 மில்லியன் தொழிலற்றவர்களையும் உள்ளடக்குகிறது.** இதேவேளை, 10 வயதிற்கும் அதற்கும் கூடுதலுமான மொத்தக் குடித்தொகைக்கு தொழிற்படையின் விகிதமாக குறிப்பிடப்படும் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் கடந்த ஆண்டின் 49.5 சதவீதத்திலிருந்து 2009இல் 48.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ் வீழ்ச்சி தொழிற்படை பங்கேற்பு வீதத்தின் ஆண், பெண் இரு வகைகளிலும் காணப்பட்டதுடன் இவை முறையே 66.6 சதவீதமாகவும் 32.8 சதவீதமாகவும் விளங்கின. கடந்த பல ஆண்டுகளாக தொழிற்படையின் பங்கேற்பு வீதத்தின் பால் வகையான பகுப்பாய்வானது கடந்த அண்மைக் காலத்தில் ஆண்களின் பங்கேற்பு வீதம் பெண்களினுடையதைவிட பெரும்பாலும் இரு மடங்கானது என்பதனை எடுத்துக்காட்டுகிறது.

[1] இலங்கையில் தொழிற்படை, தொழில்நிலை மற்றும் தொழிலின்மை மட்டங்கள் மற்றும் போக்குகள் தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட காலாண்டு தொழிற்படை அளவீட்டின் வழிமுறைகள் மூலம் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் முழு நாட்டையும் உள்ளடக்கும் விதத்தில் அதன் மாதிரி உள்ளடக்கத்தை விரிவாக்குவதற்கு திட்டமிட்டிருந்த போதும் வட மாகாணத்தின் சில மாவட்டங்களில் நிலவிய தீர்வு காணப்படாத பாதுகாப்பு நிலைமைகள் காரணமாக கடந்த சில ஆண்டுகளாக காலாண்டு தொழிற்படை அளவீட்டினால் அம் மாகாணம் முழுமையாக உள்ளடக்கப்படவில்லை. 2008ஆம் ஆண்டின் முதற் காலாண்டிலிருந்து தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களை உள்ளடக்கி அளவீடுகளை நடத்தத் தொடங்கியது. இதன்படி, விரிவான ஒப்பீட்டிற்கு, வேறு விதமாகக் கூறப்பட்டாலன்றி வட மாகாணம் தவிர்ந்த தொழிற்படைத் தரவு பகுப்பாய்வில் பயன்படுத்தப்பட்டது.

**அட்டவணை 4.8** **குடும்ப அலகுகளின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு**

| விடயம் | 2007 (அ) | 2008 (அ) | 2008 (ஆ) | 2009 (அ) 1ஆம் கால் | 2009 (அ) 2ஆம் கால | 2009 (அ) 3ஆம் கால் | 2009 (அ) 4ஆம் கால் | 2009 (அ) ஆண்டுக்கானது | 2009 (ஆ) 1ஆம் கால் | 2009 (ஆ) 2ஆம் கால் | 2009 (ஆ) 3ஆம் கால் | 2009 (ஆ) 4ஆம் கால் | 2009 (ஆ) ஆண்டுக்கானது |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| குடும்ப அலகுகளின் குடித்தொகை (இ) '000 ஆட்கள் | 15,048 | 15,079 | 16,320 | 15,353 | 15,348 | 15,475 | 15,415 | 15,398 | 16,569 | 16,493 | 16,667 | 16,585 | 16,578 |
| தொழிற்படை '000 ஆட்கள் | 7,489 | 7,569 | 8,082 | 7,659 | 7,469 | 7,626 | 7.536 | 7.572 | 8,160 | 7,961 | 8,122 | 8,501 | 8,074 |
| தொழில் உள்ளோர் | 7,042 | 7,175 | 7,648 | 7,251 | 6,999 | 7,184 | 7.125 | 7.140 | 7,710 | 7,465 | 7,642 | 7,593 | 7,602 |
| தொழில் அற்றோர் | 447 | 394 | 434 | 408 | 470 | 442 | 411 | 433 | 450 | 496 | 480 | 459 | 471 |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (ஈ) சதவீதம் | 49.8 | 50.2 | 49.5 | 49.9 | 48.7 | 49.3 | 48.9 | 49.2 | 49.2 | 48.3 | 48.7 | 48.5 | 48.7 |
| ஆண் | 67.8 | 67.9 | 68.0 | 67.4 | 66.5 | 66.3 | 66.5 | 66.7 | 67.2 | 66.0 | 66.2 | 66.5 | 66.6 |
| பெண் | 33.4 | 34.3 | 33.0 | 34.3 | 32.8 | 34.3 | 33.5 | 33.7 | 33.3 | 32.0 | 33.2 | 32.9 | 32.8 |

(அ) வடக்கு கிழக்கு மாகாணங்கள் தரவுகளில் உள்ளடக்கப்படவில்லை.
(ஆ) வடக்கு மாகாணம் தரவுகளில் உள்ளடக்கப்படவில்லை.
(இ) பத்து வயதும் அதற்கு மேற்பட்டோரையும்
(ஈ) பத்து வயதும் அதற்கு மேற்பட்டோரைக் கொண்ட குடும்ப அலகுகளின் குடித்தொகையில் தொழிற்படையின் சதவீதம்.

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

## தொழில்நிலை

காலாண்டு தொழிற்படை அளவீட்டின்படி 2009இல் **தொழில்புரியும் ஆட்களின் எண்ணிக்கையானது[2] 2008இன் 7.65 மில்லியனுடன் ஒப்படுகையில் 7.60 மில்லியனுக்கு 0.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** இவ் வீழ்ச்சி, பொருளாதாரச் செயற்பாடுகளிலான பொதுவான மெதுவடைவால் ஏற்பட்ட தொழிலாளர்களுக்கான நலிவடைந்த கேள்வியால் பகுதியளவில் ஏற்பட்டது. இது போலவே, வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரு மாகாணங்கள் தவிர்ந்த தொழில்புரிவோரின் எண்ணிக்கை 2009இல் கடந்த ஆண்டில் தொடர்பான காலப்பகுதியின் 7.18 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 7.14 மில்லியனுக்கு 0.5 சதவீதத்தால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது.

**இவ்விரு காலப்பகுதிகளுக்கிடையே முக்கிய கைத்தொழில் தொகுதிகளினுள் தொழிற் குடித்தொகையின் உள்ளடக்கத்தில் மாற்றமொன்று காணப்பட்டது.** மொத்த தொழில்நிலையில் பணிகள் துறையின் பங்கு முன்னைய ஆண்டின் 41.2 சதவீதத்திலிருந்து 2009இல் 42.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஆய்வுக்குரிய காலப்பகுதியில் பணிகள் துறை மொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு ஆகக் கூடிய பங்களிப்பை வழங்கி இவ் அதிகரிப்பைப் பேணியது. இத் துறையிலுள்ள தொழில்நிலையில் ஏற்பட்ட அதிகரிப்பு பெரும்பாலும் தனியாள் பணிகள் மற்றும் வர்த்தகம் மற்றும் சுற்றுலா விடுதிப் பணிகளில் காணப்பட்டது. எனினும், வேளாண்மைத் துறையிலான தொழில்நிலையின் பங்கு 2009இல் 32.6 சதவீதத்தில் மாற்றமின்றி தொடர்ந்து விளங்கியது.

**அட்டவணை 4.9** **பொருளாதார செயற்பாடுகளின்படி தொழில்நிலை**

| துறை | '000 ஆட்கள் 2007 (அ) | 2008 (அ) | 2008 (ஆ) | 2009 (அ) 1ஆம் கால் | 2009 (அ) 2ஆம் கால் | 2009 (அ) 3ஆம் கால் | 2009 (அ) 4ஆம் கால் | 2009 (அ) ஆண்டு | 2009 (ஆ) 1ஆம் கால் | 2009 (ஆ) 2ஆம் கால் | 2009 (ஆ) 3ஆம் கால் | 2009 (ஆ) 4ஆம் கால் | 2009 (ஆ) ஆண்டு | மொத்த தொழில்நிலையின் சதவீதம் 2007 (அ) | 2008 (அ) | 2008 (ஆ) | 2009 (அ) | 2009 (ஆ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை** | **2,202** | **2,344** | **2,490** | **2,460** | **2,227** | **2,292** | **2,295** | **2,319** | **2,613** | **2,383** | **2,426** | **2,481** | **2,476** | **31.3** | **32.7** | **32.6** | **32.5** | **32.6** |
| **கைத்தொழில்** | **1,874** | **1,888** | **2,005** | **1,806** | **1,804** | **1,833** | **1,848** | **1,823** | **1,894** | **1,914** | **1,912** | **1,921** | **1,910** | **26.6** | **26.3** | **26.2** | **25.5** | **25.1** |
| தயாரிப்பு | 1,331 | 1,355 | 1,414 | 1,297 | 1,251 | 1,308 | 1,349 | 1,301 | 1,349 | 1,310 | 1,353 | 1,380 | 1,348 | 18.9 | 18.9 | 18.5 | 18.2 | 17.7 |
| கட்டடவாக்கம் (இ) | 543 | 533 | 590 | 509 | 552 | 526 | 499 | 522 | 546 | 604 | 559 | 541 | 562 | 7.7 | 7.4 | 7.7 | 7.3 | 7.4 |
| **பணிகள்** | **2,966** | **2,943** | **3,154** | **2,985** | **2,969** | **3,059** | **2,982** | **2,999** | **3,202** | **3,168** | **3,304** | **3,191** | **3,216** | **42.1** | **41.0** | **41.2** | **42.0** | **42.3** |
| வர்த்தகம், சுற்றுலா விடுதிகள் முதலியன | 1,051 | 1,028 | 1,095 | 1,055 | 996 | 1,086 | 1,050 | 1,047 | 1,113 | 1,074 | 1,172 | 1,115 | 1,119 | 14.9 | 14.3 | 14.3 | 14.7 | 14.7 |
| போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் | 457 | 426 | 448 | 408 | 445 | 407 | 418 | 420 | 430 | 467 | 437 | 447 | 445 | 6.5 | 5.9 | 5.9 | 5.9 | 5.9 |
| நிதி, காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து | 215 | 236 | 241 | 243 | 221 | 216 | 204 | 221 | 246 | 229 | 222 | 210 | 227 | 3.1 | 3.3 | 3.2 | 3.1 | 3.0 |
| தனிப்பட்ட பணிகள் மற்றும் ஏனையவை | 1,243 | 1,253 | 1,370 | 1,280 | 1,307 | 1,349 | 1,514 | 1,362 | 1,413 | 1,398 | 1,473 | 1,419 | 1,426 | 17.7 | 17.5 | 17.9 | 19.1 | 18.8 |
| **மொத்த தொழில்நிலை** | **7,042** | **7,175** | **7,648** | **7,251** | **6,999** | **7,184** | **7,125** | **7,140** | **7,710** | **7,465** | **7,642** | **7,593** | **7,603** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |
| **தொழிற்படையின் சதவீதம்** | 94.0 | 94.8 | 94.6 | 94.7 | 93.7 | 94.2 | 94.5 | 94.3 | 94.5 | 93.8 | 94.1 | 94.3 | 94.2 | | | | | |

(அ) வடக்கு கிழக்கு மாகாணங்கள் தரவுகளில் உள்ளடக்கப்படவில்லை
(ஆ) வடக்கு மாகாணத் தரவுகள் உள்ளடக்கப்படவில்லை
(இ) சுரங்கமகழ்தல், கல்லுடைத்தல், மின்சராம், எரிவாயு மற்றும் நீர் என்பன கட்டடவாக்கத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

[2] தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் நடத்தப்பட்ட காலாண்டு தொழிற்படை அளவீடு தொழில்புரியும் ஆள் என்பது அளவீட்டுக் காலத்தில் சம்பளத்திற்காக அல்லது இலாபத்திற்கா அல்லது குடும்பத்தின் நன்மைக்காக (கொடுப்பனவின்றி) ஏதோவொரு வகையான வேலையில் ஈடுபட்டுள்ள ஒருவர் என வரைவிலக்கணம் செய்கிறது. தொழில்நிலை தகைமைகளின்படி, அளவீட்டுக் காலப்பகுதியில் கொடுப்பனவு செய்யப்பட்ட ஆட்களாக தொழில்புரிந்த ஆட்கள், தொழில்தருநர்கள், சொந்தமாகத் தொழில்புரிவோர் (சுயதொழில் புரிவோர்) அல்லது கொடுப்பனவு செலுத்தப்படாத குடும்ப வேலையாட்கள் ஆகியோர் காலாண்டுத் தொழிற்படை அளவீட்டில் தொழிலிலுள்ள ஆட்களாகக் கருதப்பட்டனர். இது அளவீட்டுக் காலப்பகுதியில் ஒருவர் தொழிலில் ஈடுபடாத போதும் அவர் தொழிலொன்றைக் கொண்டிருப்பாராயின் அவரையும் உள்ளடக்குகிறது. சுகயீனம், மோசமான வானிலை மற்றும் தொழிலாளர் பிணக்குகள் காரணமாக தற்காலிகமாக தொழிலுக்குச் செல்லாத ஊழியர்களும் தொழில் புரிபவர்களாகவே கருதப்படுவர்.

**அட்டவணை 4.10 தொழில்நிலைத் தகைமை**

சதவீதம்

| காலம் | அரசதுறை ஊழியர்கள் | தனியார் துறை ஊழியார்கள் | தொழில் தருனர்கள் | சுயவேலைச் செய்வோர் | கொடுப்பனவற்ற குடும்ப தொழிலாளர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2007 (அ) | 13.8 | 42.7 | 2.8 | 30.4 | 10.3 | 100.0 |
| 2008 (அ) | 14.9 | 41.1 | 3.0 | 30.3 | 10.8 | 100.0 |
| 2008 (ஆ) | 15.2 | 41.2 | 2.9 | 30.3 | 10.5 | 100.0 |
| **2009(ஆண்டு) (அ)** | **15.2** | **42.1** | **2.7** | **29.0** | **11.0** | **100.0** |
| 1ஆம் காலாண்டு | 15.5 | 41.4 | 2.7 | 28.4 | 12.1 | 100.0 |
| 2ஆம் காலாண்டு | 15.1 | 43.0 | 2.9 | 28.6 | 10.5 | 100.0 |
| 3ஆம் காலாண்டு | 15.7 | 42.5 | 2.9 | 28.1 | 10.7 | 100.0 |
| 4ஆம் காலாண்டு | 14.5 | 41.6 | 2.3 | 31.0 | 10.6 | 100.0 |
| **2009(ஆண்டு)(ஆ)** | **15.5** | **42.1** | **2.7** | **29.2** | **10.6** | **100.0** |
| 1ஆம் காலாண்டு | 16.0 | 41.1 | 2.6 | 28.7 | 11.6 | 100.0 |
| 2ஆம் காலாண்டு | 15.2 | 43.1 | 2.9 | 28.8 | 10.1 | 100.0 |
| 3ஆம் காலாண்டு | 16.0 | 42.8 | 2.8 | 28.1 | 10.4 | 100.0 |
| 4ஆம் காலாண்டு | 14.8 | 41.4 | 2.3 | 31.1 | 10.4 | 100.0 |

(அ) வடக்கு கிழக்கு மாகணங்களின் தரவுகள் உள்ளடக்கப்படவில்லை.
(ஆ) வடக்கு மாகாண தரவுகள் உள்ளடக்கப்படவில்லை.

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

எனினும், கைத்தொழில் துறையிலான தொழில்நிலையின் பங்கு 26.2 சதவீதத்திலிருந்து இவ்வாண்டில் 25.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்தத் தொழில்நிலையில் கைத்தொழில் துறையிலான தொழில்நிலையின் சுருக்கத்திலான வீழ்ச்சி பெரும்பாலும் தயாரிப்பு மற்றும் கட்டடவாக்கத் துறைகளிலான குறைந்த தொழில்நிலையால் ஏற்பட்டது.

**தொழில்நிலை தகைமை நியதிகளில் அரசதுறை ஊழியர்கள், தனியார் துறை ஊழியர்கள் மற்றும் கொடுப்பனவு இல்லாத குடும்பத் தொழிலாளர்களின் பங்கு 2008 உடன் ஒப்பிடுகையில் 2009இல் அதிகரித்திருக்கையில் சொந்தமாக தொழில்புரிவோரின் பங்கு வீழ்ச்சியடைந்தது.** அரச துறையின் 15.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 42.1 சதவீதம் கொண்ட முக்கிய பங்கைக் கொண்டுள்ள தனியார் துறையிலான தொழில்நிலை 2009இல் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தியது.

**அட்டவணை 4.11 அரசதுறை தொழில்நிலை**

| துறை | 2007 | 2008 | 2009(அ) | சதவீத மாற்றம் 2008/2007 | சதவீத மாற்றம் 2009/2008(அ) |
|---|---|---|---|---|---|
| அரசு (ஆ) | 937,494 | 990,410 | 1,047,041 | 5.6 | 5.7 |
| அரசுசார் (இ) | 259,116 | 261,318 | 266,543 | 0.8 | 2.0 |
| அரசதுறை | 1,196,610 | 1,251728 | 1,313,584 | 4.6 | 4.9 |

(அ) தற்காலிகமானவை
(ஆ) மத்திய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றம், மற்றும் மாகாண சபைகள்
(இ அரசகூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள், அரச அதிகார சபைகள்


மூலம் : இலங்கை மத்திய வங்கி

## தொழிலின்மை

**கடந்த சில ஆண்டுகளாக தொழிலின்மை வீதத்தில் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு உலக பொருளாதார நெருக்கடிக்கு ஏற்புடையதான பொருளாதாரச் செயற்பாடுகள் ஆர்வம் குறைந்ததன் பெருமளவு காரணமாக 2009இன் முதலாம் காலாண்டிலிருந்து நேர்மாறாகியது.** காலாண்டு தொழிற்படை அளவீட்டின்படி, தொழிலின்மை வீதம் 2008இல் பதிவு செய்யப்பட்ட 5.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2009இல் 5.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2009இல் மதிப்பிடப்பட்ட தொழிலற்றோரின் மொத்த எண்ணிக்கை 471,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் முன்னைய ஆண்டின் 434,000 ஐ விட உயர்வானதாகும். இதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரு மாகாணங்களும் நீங்கலான தொழிலின்மை வீதமும் இவ்விரு காலப்பகுதிகளுக்கிடையே 5.2 சதவீதத்திலிருந்து 5.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மீட்சி, திட்டமிடப்பட்டு தற்போது நடைபெற்று வரும் உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், மீள்நிருமாணம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனருத்தாபன நிகழ்ச்சித்திட்டங்கள், என்பன எதிர்பார்க்கப்பட்ட உலக மீட்சியுடன் இணைந்து 2010இல் உயர் அளவிலான தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும். உண்மையிலேயே, இவ்வாண்டில் இறுதி இரண்டு காலாண்டுகளிலான தொழிலின்மை படிப்படியாக வீழ்ச்சியடைந்து மீட்சி இடம்பெற்று வருவதை எடுத்துக்காட்டுகிறது.

**இளைஞர்களிடையேயான தொழிலின்மை, குறிப்பாக கல்விகற்ற இளைஞர்களிடையேயான தொழிலின்மை கரிசனைக்குரிய விடயமாக வந்துள்ளது.** பிரச்சனையின் மிகத் தீவிரமான தன்மை கற்ற இளைஞர்களைவிட கற்ற யுவதிகளிடையே காணப்படுவதே இதற்கு காரணமாகும். கல்வி மட்டத்திலான தொழிலின்மையைக் கருத்திற் கொள்கையில் உயர்ந்த தொழிலின்மை வீதமான 11.2 சதவீதம் க.பொ.த. உயர்தரத்தையும் அதற்கு மேலான தகைமைகளையும் கொண்டவர்களிடையே பதிவு செய்யப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து க.பொ.த. (சாதாரண) தகைமை பெற்றவர்களிடையே (8.5 சதவீதம்) பதிவு செய்யப்பட்டது. சந்தையிலுள்ள தொழில் வாய்ப்புக்களுக்கும் தொழிலற்றவர்களின் அபிலாசைகளுக்கிடையே தொடர்ச்சியாக இருந்து வரும் பொருத்தப்பாடின்மை இப் பிரச்சனைக்கான பகுதிக் காரணமாக விளங்கியது.

**வரைபடம் 4.2 தொழிற்படை மற்றும் தொழிலின்மையின் போக்கு 2005-2009**



**அட்டவணை 4.12**

**தொழிலின்மை வீதம் (தொழிற்படையின் சதவீதமாக தொழிலற்றோர்)**

| வகை | 2007(அ) | 2008(அ) | 2008(ஆ) | 2009 (அ) 1ஆம் கால் | 2009 (அ) 2ஆம் கால் | 2009 (அ) 3ஆம் கால் | 2009 (அ) 4ஆம் கால் | 2009 (அ) ஆண்டு | 2009 (ஆ) 1ஆம் கால் | 2009 (ஆ) 2ஆம் கால் | 2009 (ஆ) 3ஆம் கால் | 2009 (ஆ) 4ஆம் கால் | 2009 (ஆ) ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **அனைத்து** | **6.0** | **5.2** | **5.4** | **5.3** | **6.3** | **5.8** | **5.4** | **5.7** | **5.5** | **6.2** | **5.9** | **5.7** | **5.8** |
| **பால் வகைப்படி** | | | | | | | | | | | | | |
| ஆண் | 4.3 | 3.6 | 3.7 | 4.1 | 4.7 | 4.4 | 3.9 | 4.3 | 4.2 | 4.6 | 4.4 | 4.0 | 4.3 |
| பெண் | 9.0 | 8.0 | 8.4 | 7.5 | 9.1 | 8.1 | 8.1 | 8.2 | 7.9 | 9.2 | 8.6 | 8.7 | 8.6 |
| **வயது அடிப்படையில்** | | | | | | | | | | | | | |
| 15 - 19 | 21.6 | 20.6 | 20.8 | 17.8 | 26.6 | 20.4 | 20.3 | 21.2 | 18.3 | 25.0 | 20.6 | 19.7 | 20.9 |
| 20 - 29 | 15.0 | 13.2 | 13.7 | 14.8 | 15.5 | 15.3 | 14.7 | 15.1 | 15.2 | 15.2 | 15.5 | 15.7 | 15.4 |
| 30 - 39 | 3.3 | 3.1 | 3.1 | 3.5 | 4.1 | 3.9 | 3.1 | 3.6 | 3.3 | 4.3 | 3.9 | 3.3 | 3.7 |
| 40உம் அதற்கு மேலும் | 1.3 | 1.2 | 1.2 | 1.1 | 1.7 | 1.4 | 1.3 | 1.4 | 1.2 | 1.6 | 1.4 | 1.3 | 1.4 |
| **கல்விமட்ட அடிப்படையில்** | | | | | | | | | | | | | |
| வகுப்பு 4/ ஆண்டு 5 மற்றும் அதற்குக்கீழ் | 1.3 | 1.1 | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| வகுப்பு 5-9/6-10ஆண்டு | 5.2 | 4.5 | 4.5 | 4.3 | 5.7 | 5.2 | 4.4 | 4.9 | 4.4 | 5.7 | 5.3 | 4.5 | 5.0 |
| க.பொ.த(சா.த)/பொ.க.தே.சா | 8.2 | 7.4 | 7.8 | 8.9 | 8.6 | 8.5 | 6.5 | 8.1 | 9.3 | 8.6 | 9.1 | 6.9 | 8.5 |
| க.பொ.த(உ.த)/ தே.க.பொ.த.ப மற்றும் அதற்குமேல் | 11.8 | 9.9 | 10.5 | 10.1 | 10.4 | 10.3 | 12.5 | 10.8 | 10.6 | 10.4 | 10.2 | 13.4 | 11.2 |

(அ) தரவுகளில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் உள்ளடக்கப்படவிலலை.
(ஆ) தரவுகளில் வடக்கு மாகாணம் உள்ளடக்கப்படவில்லை.

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்டவாறு **தொழிலின்மை வீதம் 15 - 24 வயதுத் தொகுதியினரிடையே மிக அதிகமாகக் காணப்பட்டது.** இவ் வயதுத் தொகுதியினரிடையேயான தொழிலின்மை வீதம் 2008இன் 18.8 சதவீதத்திலிருந்து 21.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. உயர்ந்த தொழிலின்மை வீதமான 27.9 சதவீதம் யுவதிகளிடையே பதிவு செய்யப்பட்டதுடன் இது இளைஞரிடையே காணப்பட்ட 17.1 சதவீதத்தினைவிட உயர்வானதாகும். பொருளாதாரச் செயற்பாடுகளில் ஏற்பட்ட பொதுவான மோசமான நிலை இந் நிலைமைக்கு பங்களிப்புச் செய்திருக்கக்கூடும்.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

**தொழிற்படைக்கான வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் 2009இல் தொழில்நிலையின் முக்கிய மூலமாக தொடர்ந்து விளங்கியது.** கடந்த ஆண்டுகளில் வெளிநாட்டு வேலைவாய்ப்பிலான உறுதியான அதிகரிப்பை வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களுக்கு கணிசமானளவில் பங்களிப்புச் செய்திருக்கையில் இலங்கையில் வேலையில்லாப் பிரச்சனை மீதான அழுத்தத்தைக் குறைக்கிறது. எனினும், வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக சென்றவர்களின் மொத்த எண்ணிக்கை 2009இன் முதலாம் காலாண்டில் சிறிய மெதுவடைவைக் காட்டிய போதிலும், 2009ஆம் இரண்டாம் காலாண்டிலிருந்து இத் தற்காலிக பின்னடைவிலிருந்து உறுதியாக மீட்சியடைந்தது. இவ் வீழ்ச்சி பெரும்பாலும் உலகளாவிய மந்தநிலை காரணமாக வெளிநாடுகளிலிருந்து தொழிலாளர்களுக்கான குறைந்த கேள்வியால் ஏற்பட்டது. 2009இல் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காகச் சென்றவர்களின் மொத்த எண்ணிக்கை 2008இன் 250,499 உடன் ஒப்பிடுகையில் 247,119 ஆகக் காணப்பட்டது. வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி தொழில்சார் நிபுணர்கள், மத்தியதர, லிகிதர் மற்றும் அது சார்ந்த மற்றும் தேர்ச்சியற்ற தொழிலாளர் வகைகளில் அவதானிக்கப்பட்டது.

**கூடிய வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும், இலங்கையில் இருந்து வெளிநாட்டுக்குச் சென்ற தொழிலாளர்களுக்கான அதிகரித்த சமூக நன்மைகளுடன் பணிபுரியும் சிறந்த சூழலை உருவாக்குவதற்கும் தொடர்பான அதிகாரசபைகளால் 2009 இல் செயற்பாட்டு ரீதியிலான**

**அட்டவணை 4.13**

**வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்காக சென்றோர்**

| தொழில்நிலை | 2007 எண்ணிக்கை | 2007 சதவீதம் | 2008 எண்ணிக்கை | 2008 சதவீதம் | 2009(அ) எண்ணிக்கை | 2009(அ) சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| **மொத்த தொழிலிலுள்ளோர்** | **218,459** | **100.0** | **250,499** | **100.0** | **247,119** | **100.0** |
| **மூலத்தின்படி** | | | | | | |
| உரிமம்பெற்ற முகவர்கள் | 146,515 | 67.1 | 160,973 | 64.3 | 156,720 | 63.4 |
| ஏனையோர் | 71,944 | 32.9 | 89,526 | 35.7 | 90,399 | 36.6 |
| **பால் வகையின்படியின்படி** | | | | | | |
| ஆண்கள் | 103,482 | 47.4 | 128,232 | 51.1 | 119,276 | 48.3 |
| பெண்கள் | 114,977 | 52.6 | 122,267 | 48.9 | 127,843 | 51.7 |
| **மனிதவலு வகையின் படி** | | | | | | |
| தொழில் வல்லுனர்கள் | 1,653 | 0.8 | 2,835 | 1.1 | 2,820 | 1.1 |
| நடுத்தர மட்டம் | 3,962 | 1.8 | 8,727 | 3.5 | 6,392 | 2.6 |
| எழுதுவினைஞர் மற்றும் தொடர்பானோர் | 4,551 | 2.1 | 6,791 | 2.7 | 6,706 | 2.7 |
| தேர்ச்சிபெற்ற தொழிலாளர் | 50,263 | 23.0 | 59,718 | 23.8 | 61,230 | 24.8 |
| ஓரளவு தேர்ச்சிபெற்ற தொழிலாளர் | 3,499 | 1.6 | 5,326 | 2.1 | 6,036 | 2.4 |
| தேர்ச்சியற்ற தொழிலாளர் | 52,176 | 23.9 | 59,239 | 23.6 | 50,158 | 20.3 |
| வீட்டுப் பணிப் பெண்கள் | 102,355 | 46.9 | 107,923 | 43.1 | 113,777 | 46.0 |

(அ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

**அட்டவணை 4.14**

**நாடுகளின் அடிப்படையில் தொழில் வாய்ப்புக்காக வெளிநாடு சென்றோர்**

| நாடு | 2008 | | 2009(அ) | | மாற்றம்(அ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பங்கு | எண்ணிக்கை | பங்கு | எண்ணிக்கை | சதவீதம் |
| கட்டார் | 39,543 | 15.7 | 43,744 | 17.7 | 4,201 | -85.7 |
| சவுதி அரேபியா | 67,804 | 26.9 | 77,825 | 31.5 | 10,022 | -204.4 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | 51,763 | 20.5 | 39,586 | 16..0 | -12,177 | 248.4 |
| குவைத் | 47,168 | 18.7 | 42,400 | 17.2 | -4,768 | 97.3 |
| ஏனையவை | 45,743 | 18.2 | 43,563 | 17.6 | -2,180 | 44.5 |
| **மொத்தம்** | **252,021** | **100.0** | **247,119** | **100.0** | **-4,902** | **100.0** |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

**அட்டவணை 4.15**

**முக்கிய பொருளாதாரத் துறைகளின்படி தொழிலாளர் உற்பத்தித்திறன்**

| | 2007 | 2008 | 2009(அ) |
|---|---|---|---|
| **நிலையான விலைகளில் (2002) மொ.உ.உ ரூ.மில்லியன்** | **2,232,656** | **2,365,500** | **2,447,176** |
| வேளாண்மை | 265,870 | 285,897 | 293,051 |
| கைத்தொழில் | 635,199 | 672,790 | 701,197 |
| பணிகள் | 1,331,587 | 1,406,814 | 1,425,928 |
| **தொழிலாளர் உற்பத்தியாக்கம் ரூ.’000 ஆளுக்கு** | **317.0 (ஆ)** | **309.3 (இ)** | **321.9 (இ)** |
| வேளாண்மை | 120.7 (ஆ) | 114.8 (இ) | 118.4 (இ) |
| கைத்தொழில் | 339.0 (ஆ) | 335.6 (இ) | 367.1 (இ) |
| பணிகள் | 449.0 (ஆ) | 446.1 (இ) | 451.7 (இ) |

(அ) தற்காலிகமானவை
(ஆ) வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த தொழில்நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது
(இ) வடக்கு மாகாணம் தவிர்ந்த தொழில்நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி.

**வழிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன.** அத்தகைய வழிமுறைகள் கைத்தொழிலில் சட்ட ரீதியற்ற நடைமுறைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்திற்காகவும் ஆட்சேர்ப்பு முகவர்கள் உள்ளிட்ட பல்வேறு துறையினரின் கைகளில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களால் அறிவிக்கப்படும் சுரண்டல்களைத் தவிர்ப்பதற்காகவும் 1985ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகச் சட்டத்தின் திருத்தத்தை உள்ளடக்குகிறது. 2009இல் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட இன்னுமொரு முக்கிய கொள்கை யாதெனில் பதுளை, அநுராதபுரம் மற்றும் கண்டியில் மாகாண அலுவலகங்களைத் திறப்பதனூடாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பணிகளை பன்முகப்படுத்தியமையாகும். இது போலவே “கிழக்கின் உதயம் நிகழ்ச்சித்திட்டம்” இன் கீழ் இப் பணியகத்தின் மாவட்ட நிலையங்கள் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் நிறுவப்பட்டன. இத்துடன், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பணியாற்றும் நியமங்களை மேம்படுத்தும் பொருட்டு குறிப்பாக தேர்ச்சியற்ற வகைகளுக்கான ஆகக் குறைந்தபட்ச சம்பளத்தை நிர்ணயித்தல் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டன. இதேவேளை, வேலைத் தலங்களில் துஸ்பிரயோகங்களைத் தவிர்ப்பதற்கு இலங்கைத் தூதரகங்களால் மேற்கொள்ளப்படும் மேற்பார்வை இறுக்கமாக்கப்பட்டது. இவ்வாண்டில் பணியகத்தால் ஆரம்பிக்கப்பட்ட இன்னுமொரு முக்கிய செயற்பாடு யாதெனில் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் தொழில் ரீதியான அபிலாசைகள் உள்ளடங்கலாக ஆர்வலர்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு அனைத்தையும் உள்ளடக்கிய தரவுத் தளத்தை ஏற்பாடு செய்தமையாகும். குடிபெயர்ந்த தொழிலாளர்கள் எதிர்பார்க்கப்படும் நலன்புரி மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 2010 இல் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு பணியகத்தின் பணிகளை அதிகரித்தல் என்பவற்றுடன் சேர்ந்து இவ் வழிமுறைகள் எதிர்வரும் ஆண்டுகளில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மீது சாதகமான விளைவை ஏற்படுத்தும்.

**நாட்டின் வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களின் முக்கியமானதும் உறுதியானதுமான மூலமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்ந்து விளங்கியது.** இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின்படி இலங்கையின் குடிபெயர்ந்த தொழிலாளர் குடித்தொகை ஏறத்தாழ 1.8 மில்லியனாகும். குடிபெயர்ந்த மொத்தத் தொழிலாளர் குடித்தொகையில் குடிபெயர்ந்த பெண் தொழிலாளர்கள் ஆதிக்கம் செலுத்தி 2009இல் 70 சதவீதம் கொண்ட பிரதான பங்கைப் பதிவு செய்தனர். கடந்த சில ஆண்டுகளில் ஆண் குடிபெயர்வில் அவதானிக்கப்பட்ட தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் போக்கு 2009இல் நேர்மாறாகியதுடன் மொத்த வெளிச் செல்லல்கள் 2008இன் 51 சதவீதத்திலிருந்து 48 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. இதன்படி, ஆண்:பெண் வெளிச் செல்லல்களின் பால் அடிப்படையிலான அமைப்பு கடந்த ஆண்டின் 51:49 உடன் ஒப்பிடுகையில் 2009இல் மொத்தக் குடிபெயர்வின் 48:52 என்ற விகிதத்தைப் பதிவு செய்தது. பணிப் பெண்களுக்கான வெளிச்செல்லல்கள் 2008இன் 107,923 இலிருந்து 2009இல் 113,777 இற்கு 5.4 சதவீதத்தால் அதிகரித்தன. மேலும், பணியகம் மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கு வெளியேயுள்ள நாடுகளில் அதிகரித்த தொழில் வாய்ப்புகளை இலக்கிடுவதில் மரபு ரீதியற்ற சந்தைகளில் புதிய வாய்ப்புக்களை தொடர்ந்து ஆராய்ந்தது. 2009இல் பெறப்பட்ட மொத்த வெளிநாட்டு பணவனுப்பல்கள் முன்னைய ஆண்டில் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 2,918.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,330.3 மில்லியனுக்கு 14.1 சதவீதத்தால் அதிகரித்தன. தசாப்தங்கள் கொண்ட நீண்டகால உள்நாட்டுப் போர் முடிவுற்றமை, மரபு ரீதியற்ற சந்தைகளில் புதிய சந்தை வாய்ப்புக்களை ஆராய்வதற்கான முயற்சிகள், நடைமுறைகளை மீள் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள், வெளிநாட்டில் தொழில் சந்தைத் தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமான தொழில் ரீதியான அபிலாசைகளைத் தயாரிப்பதற்கு நாட்டிற்குரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பன வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களிலும் நாட்டிற்கான வெளிநாட்டு செலாவணி பணவனுப்பல்களிலும் மேலும் முன்னேற்றத்திற்கு வழியமைக்கும்.

**மத்திய கிழக்கு பிராந்தியம் வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தையில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி, வீட்டுப் பணிப் பெண்களை பெரும்பான்மையாக உள்ளடக்கிய குடிபெயர்ந்த மொத்தத் தொழிற்படையில் 90 சதவீதத்திற்கும் கூடுதலானவற்றிற்கு வகை கூறியது.** மத்திய கிழக்குப் பிராந்தியத்தினுள், சவூதி அரேபியா, டோகா கட்டார், குவைத் மற்றும் ஐக்கிய அரபுக் குடியரசு 2009இல் வெளிநாட்டு தொழில்நிலைக்கான மொத்த வெளிச்செல்லல்களின் 82.4 சதவீதத்திற்கு வகை கூறியது. இந் நாடுகளினுள் குடிபெயர்ந்த மொத்தத் தொழிலாளர்களில் 49.2 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்த சவூதி அரேபியா, டோகா கட்டார் மட்டும் 2008 உடன் ஒப்பிடுகையில் முறையே 15.4 சதவீதத்தாலும் 10.8 சதவீதத்தாலும் அதிகரித்திருக்கையில் குவைத் மற்றும் ஐக்கிய அரபுக் குடியரசு முறையே 9.7 சதவீதம் மற்றும் 22.5 சதவீத வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. வெளிநாட்டு வேலைக்குச் செல்லும் வீட்டுப் பணிப் பெண்களின் பங்கு முன்னைய ஆண்டின் 43 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2009இல் 46 சதவீதத்திற்கு அதிகரித்தது. வேலைத் தலத்தில் குடிபெயர்ந்த ஊழியர்களின் நலன்புரிக்கும் பாதுகாப்பிற்குமாக கட்டார், பாரெயின் மற்றும் லிபியா ஆகிய தொழிலாளர்களைப் பெற்று வரும் நாடுகளுடன் பணியகத்தால் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் வெளிநாட்டு வேலைவாய்ப்பை கூடியளவு கவர்ச்சியுள்ளதாக ஏற்படுத்தும். வெளிநாட்டு வேலை வாய்ப்பிலிருந்து நாடு அடையும் நன்மைகளை அதிகரிக்கும் பொருட்டு குடிபெயர்ந்த தொழிலாளர்களின் நலம் மற்றும் தொழில் பாதுகாப்பு பிரச்சனைகளைத் தீர்க்கும் அதேவேளை வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பால் ஏற்படும் சமூகச் சிக்கல்களையும் தீர்க்க வேண்டும்.

## தொழிலாளர் உற்பத்தித்திறன்

**கடந்த சில ஆண்டுகளில் அனுபவிக்கப்பட்ட போக்கைப் பின்பற்றி முழு மொத்த தொழிலாளர் உற்பத்தித்திறன் 2009இல் தொடர்ந்து முன்னேறியது.** தொழிலாளரொருவருக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியினால் (2002 இன் நிலையான விலைகளில்) அளவிடப்பட்டவாறான தொழிலாளர் உற்பத்தித்திறன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2009இல் தொழிலாளரொருவருக்கு ரூ.322,200இற்கு 4.2 சதவீதத்தால் அதிகரித்தது. உற்பத்தித்திறனிலான அதிகரிப்பு பெரும்பாலும் கைத்தொழில் (9.4 சதவீதத்தால்), வேளாண்மை (3.7 சதவீதத்தால்) மற்றும் துறைகளிலான உற்பத்தித்திறனின் வளர்ச்சியால் ஏற்பட்டிருக்கையில் இவ்வாண்டில் பணிகள் துறையிலான உற்பத்தித்திறன் 1.3 சதவீதம் கொண்ட சிறு அதிகரிப்பைப் பதிவு செய்தது. வேளாண்மை பெருமளவிற்கு இயந்திர மயமாக்கப்பட்டமை உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு பங்களிப்பு செய்திருக்கக்கூடும். எனினும், விரிவாக்கப் பணிகளை அதிகரித்தல், முன்னேற்றகரமான விதைகளின் பயன்பாடு, தொழில்நுட்பம், எந்திரமயப்படுத்தல் என்பவற்றூடாக வேளாண்மைத் துறையிலான உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு மேலும் வாய்ப்பு காணப்படுகிறது. இத்துடன், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களின் பெறுமதி கூட்டலைப்பலப்படுத்துதல் உணவுப்பயிர்களின் பயிர்ச்செய்கையை நீடித்து நிலைத்திருக்கும் அடிப்படையில் அபிவிருத்தி செய்ய உதவும். தொழிலாளர் உற்பத்தித்திறனிலான தொடர்ச்சியான அதிகரிப்பு ஊக்கமளிப்பதுடன் உயர் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு உதவும் அதேவேளை பொருளாதாரத்தில் பணவீக்க அழுத்தங்களையும் கட்டுப்படுத்துகிறது.

## தொழில் உறவுகள் மற்றும் தொழிற்சந்தைச் சீர்திருத்தங்கள்

**தனியார் துறையின் வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டின் 51 உடன் ஒப்பிடுகையில் 2009இல் 8இற்கு வீழ்ச்சியடைந்தமை வரவேற்கத்தக்க அபிவிருத்தியாகும்.** இது போலவே, 2009இல் இழக்கப்பட்ட மொத்த மனித நாட்களும் 2008இன் 65,655 உடன் ஒப்பிடுகையில் 7,665 இற்கு கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது. பெருந்தோட்டத் துறையில் வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 2008இன்

அட்டவணை 4.16

**தனியார்துறைக் கைத்தொழில்களில் வேலை நிறுத்தங்கள்**

| ஆண்டு | பெருந்தோட்டம் | | | ஏனையவை (அ) | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை |
| 2006 | 19 | 196,520 | 4,821,394 | 34 | 13,283 | 72,513 | 53 | 209,803 | 4,893,907 |
| 2007 | 8 | 1,468 | 6,089 | 17 | 6,079 | 36,109 | 25 | 7,547 | 42,198 |
| **2008** | **34** | **34,014** | **41,525** | **17** | **3,917** | **24,130** | **51** | **37,931** | **6,5655** |
| 1ஆம் காலாண்டு | - | - | - | 6 | 1,649 | 12,359 | 6 | 1,649 | 12,359 |
| 2ஆம் காலாண்டு | 4 | 491 | 1,037 | 4 | 754 | 1,254 | 8 | 1,245 | 2,291 |
| 3ஆம் காலாண்டு | 22 | 31,648 | 33,609 | 4 | 870 | 955 | 26 | 32,518 | 34,564 |
| 4ஆம் காலாண்டு | 8 | 1,875 | 6,879 | 3 | 644 | 9,562 | 11 | 2,519 | 16,441 |
| **2009(அ)** | **2** | **300** | **300** | **6** | **4,720** | **7,365** | **8** | **5,020** | **7,665** |
| 1ஆம் காலாண்டு | 2 | 300 | 300 | 3 | 3,095 | 6,190 | 5 | 3,395 | 6,490 |
| 2ஆம் காலாண்டு | - | - | - | 3 | 1,625 | 1,175 | 3 | 1,625 | 1,175 |
| 3ஆம் காலாண்டு | - | - | - | - | - | - | - | - | - |
| 4ஆம் காலாண்டு | - | - | - | - | - | - | - | - | - |

(அ) அரசசார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய அனைத்து தனியார் நிறுவனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : தொழில் திணைக்களம்

34 வேலை நிறுத்தங்களுடன் ஒப்பிடுகையில் 2009இல் 2 இற்கு வீழ்ச்சியடைந்தது. இழக்கப்பட்ட மொத்த மனித நாட்களும் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்களவில் மேம்பாடடைந்தமைக்கு தொழில்தருநர்கள், தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களிடையே நிலவிய கைத்தொழில் சமூக நிலைமையே காரணமாகும். 2009இல் எஞ்சிய தனியார் துறையில் வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் 17 உடன் ஒப்பிடுகையில் 6 இற்கு வீழ்ச்சியடைந்தது. இவ் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்ட மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 3,917 இலிருந்து 2009இல் 4,720 இற்கு அதிகரித்த போதிலும் இழக்கப்பட்ட மனித நாட்கள் முன்னைய ஆண்டின் 24,130 உடன் ஒப்பிடுகையில் ரூ.7,365 இற்கு 69 சதவீதத்தால் கடுமையாக வீழ்ச்சியடைந்தன. இச் சாதகமான அபிவிருத்தி இத் தரப்பினர்களிடையேயான சிறந்த உறவு முறைகள், முகாமைத்தத்துவ நடைமுறைகளில் பெருமளவு வெளிப்படையான தன்மை, கைத்தொழில் சமூக நிலையை மேம்படுத்துவதற்கு வேலைத் தலத்தில் சிறந்த சமூக கலந்துரையாடலைப் பேணியமை போன்ற பல தரப்பட்ட காரணிகளின் இணைந்த விளைவால் ஏற்பட்டதாகும். அத்தகைய ஆற்றல்மிக்க தொழில்புரியும் சூழலைத் தொடர்ந்து பேணுதல் நாட்டில் முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் இன்றியமையாததாகும்.